Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/720)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 07 செவ்வாய்க்கிழமை (21.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 265



மக்கள் சேவையாளர்களை பாராட்டுவது மகிழ்ச்சியானது

04



"சனல் – 4" இராணுவம் தனியாக விசாரிக்கும்

08



எலிகளும் தற்கொலை செய்யுமா?

11



பதுக்கல் பணத்தில் பாதி காங்கிரஸிற்கு சொந்தம்

12

# அரசியல் உரிமையை மீட்க மீண்டும் அரிய சந்தர்ப்பம்

## அழைக்கிறார் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடிய அரிய சந்தர்ப்பம் ஒன்று மறுபடியும் இப்போது கனிந்திருக்கிறது. கடந்த காலங்களில் கிடைத்திருந்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் தவறவிட்ட அனுபவங்களை படிப்பினைகளாகக் கற்றுக்கொண்டு இனியாவது சக தமிழ் தலைமைகள் சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்த முன்வரவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உரிமை என்பது வெறுமனே பேசிக்கொண்டிருப்பதற்கான விடயமல்ல. தேர்தல் வெற்றிகளுக்காக மட்டும் பயன்படுத்தப்படும் வெற்றுக்கோசமும் அல்ல. அது அடைந்தே தீரவேண்டிய எமது மக்களின் மாபெரும் சொத்து. தமிழ் மக்களின் அரசியலுரிமைகளை வென்றெடுப்பதற்கான அரிய பல சந்தர்ப்பங்கள கடந்த காலங்களில் கனிந்து வந்திருந்தன. ஆனாலும் அவைகளை அவ்வப்போது சக தமிழ் தலைமைகள் சரிவரப்பயன்படுத்த விரும்பாத காரணத்தால் தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைக்கான தீர்வு என்பது இறுதி வரை தீராப்பிரச்சினையாகவே நீடித்து வந்திருக்கின்றது. இதனால் அழிவுகளும் அவலங்களும் வதைகளும் வலிகளும் மட்டுமே தமிழ் மக்கள் சந்தித்திருந்த துயர வரலாறாகும். இது துயரங்களையும் அழிவுகளையும் இழப்புக்களையும் சொல்லியழும் காலமல்ல. அழிவுகளிலும் இழிவுகளிலும் இருந்து நாம் நிமிர்ந்தெழ வேண்டிய காலம். அழிவுகள் நடந்தன என்பது உண்மையாயினும் அந்த அழிவுகளுக்கு அடுத்தவர்களே காரணம் எனக் கூறுவதை விடவும் தமிழ் தலைமைகள் தாம்விட்ட தவறுகளையும் உணர்ந்துகொண்டு நடந்து முடிந்த தமிழ் மக்களின் அழிவுகளுக்கு பரிகாரம்தேட முன்வர வேண்டும். கண்கெட்ட பின்பு சூரிய வணககம் என்பது போல் தமிழ் மக்கள் அழிபட்டு வதைபட்டு நிற்கும் (15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு 13ஆவது திருத்தம் அமுலாக வேண்டும்

### அமைச்சர் ராஜித சேனாரட்ன

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்களை வழங்குவது குறித்தும் ஆராயப்பட வேண்டியது அவசியமாகும் என்று மீன் பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். அரசியல் தீர்வு குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் தற்போது வடக்கு மற்றும் (15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் விரைவில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை

யாழ்.மாவட்ட மக்களின் நன்மை கருதி சர்வதேச தரத்திலான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை யாழ்ப்பாணத்திலும் பெற்றுக கொள்வதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டிருக்கிறது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. யுத்தத்தில் சிக்கிப் படுகாயமடைந்தவர்களும் ஏனையவர்களுக்கும் மேற்படி சிகிச்சை மிக அவசியம் தேவைப்படுவதால் மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இம்முயற்சியின் முதற்கட்டமாக இலவச பிளாஸ்ரிக் சிகிச்சை முகாம் ஒன்று (15ஆம் பக்கம் பார்க்க)

## அதிக மாணவர்கள் அனுமதி

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 24 ஆம் திகதி வெளியிடப் படவுள்ளது. இதன்படி எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் மூன்று வார காலத்திற்குள் மாணவர்கள் தங்களின் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியுமென தேசிய கல்வியியற் கல்லூரி ஆணையாளர் திஸ்ஸஹேவா விதாரண தெரிவித்துள்ளார். கடந்த 2010 ஆம் வருடம் க.பொ.த (15ஆம் பக்கம் பார்க்க)




பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து யாழ்.நகரில் நேற்று நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது... (படம் - கார்த்திகேயன்)

## இளவயதுக் குற்றவாளிகள் யாழ்.மாவட்டத்தில் அதிகம்

### அபாயமணி அடிக்கிறார் யாழ்.பொலிஸ் அதிகாரி

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் இளைஞர், யுவதிகளின் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றோர் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். ஏனெனில் இலங்கையில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்திலேயே இளவயதினர் மேற்கொள்ளும் குற்றச்செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறு யாழ். பொலிஸ் நிலைய பொதுசனத்தொடர்பு பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயந்த தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் குற்றச்செயல்களைத் தொடர்ந்து கிராம மட்ட விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் நேற்று முன்தினம் கந்தர்மடம் ஜே/102 கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர் எஸ்.ஸ்ரீரிஸ்கந்தராசா தலைமையில் விழிப்புக் (15ஆம் பக்கம் பார்க்க)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

## உதயன் எம்.பி. உறுதி



(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கைதடி - நாவற்குழி பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி கைதடி குமாரசுவாமி வித்தியாலய மைதானத்தில் முன்பள்ளி ஆசிரியை திருமதி சுபத்திராதேவி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் - முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வட மாகாணத்தில் விரைவில் வழங்கவுள்ளோம்.

இதன்போது ஆசிரியர்களின் கல்வித் தகைமை செயற்பாடு என்பன கவனத்தில் கொள்ளப்படும். முன்பள்ளி சிறார்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோர்களும் ஊக்கப்படுத்த வேண்டும். அவ்வாறே அவர்களை நல்வழியில் இட்டுச் செல்ல வேண்டிய கடப்பாடும் பெற்றோர்களின் கைகளிலேயே உள்ளது. சிறார்கள் விளையாட்டில் மட்டுமன்றி கல்வியிலும் ஊக்கமுடன் செயற்பட வேண்டும்.

இந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதிலும் சிறார்களின் வாழ்வை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லவும் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். எனவே எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியான வகையில் பயன்படுத்தி தற்போது கிடைத்துள்ள சமாதானத்தை நிலையான சமாதானமாக மாற்ற முயலவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) மேலும் தெரிவித்தார்.

இதன் போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்களின் நிதியுதவியில் கைதடி நாவற்குழி பிரதேச முன்பள்ளிகளில் கல்வி கற்கும் 150 முன்பள்ளி சிறார்களக்கு சிறப்பு பரிசில்களை வழங்கி வைத்தார்.

பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் 13 முன்பள்ளிகள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## தகவல் தொழில்நுட்பம் அடையாள அட்டைகள் பெறலாம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமாணி கற்கை நெறியை பயின்று பல்கலைக்கழக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களின் பல்கலைக்கழக அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் இல.324 பலாலி வீதி, பல்கலைக்கழக சந்தியில் அமைந்துள்ள யாழ் எம்.சி.எஸ் தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# ஊர்காவற்துறையில் டெங்கு ஒழிப்பு தீவிரம்



(ஊர்காவற்துறை)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் முக்கிய கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் திட்டப் பணிப்பாளர் து.சுதர்சனா தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் சுகாதாரப் பணிமனை பொறுப்பதிகாரி, சுகாதார பரிசோதகர், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்ததியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

நேற்று முதல் வரும் 26 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதன் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. (14)

# வீதி விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைக்கு மருத்துவ சிகிச்சைக்காக மனைவி மற்றும் பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை முத்திரைச்சந்திப் பகுதியில் நடைபெற்ற வீதி விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார்.

அவரது மனைவியும் பிள்ளையும் தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றி தப்பித்தனர். அவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் சேதமடைந்தது.

கரவெட்டியைச் சேர்ந்த க.கமலநாதன் (வயது 28) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவத்தின்போது கன்ரர் ரக வாகனமொன்றும் குறித்த மோட்டார் சைக்கிளும் மோதியே இவ்விபத்து எற்பட்டது.

படுகாயமடைந்தவர் சிகிச்சையின் நிமித்தம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

# கிளிநொச்சியில் பண மோசடி; சட்டத்தரணிக்குப் பிடியாணை

(முரசுமோட்டை)

கிளிநொச்சியில் பண மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி குறித்த சட்டத்தரணிக்கு எதிராக பண மோசடி தொடர்பான இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த முதலாம் திகதி வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிபதி பெ.சிவகுமார், குறித்த சட்டத்தரணிக்கு நேற்றைய தினம் மன்றில் ஆஜராகுமாறு அழைப்புக்கட்டளை அனுப்ப உத்தரவிட்டிருந்தார்.

நேற்றைய தினம் குறித்த சட்டத்தரணி மன்றிற்கு ஆஜராகாததையடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தால் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டத்தரணி 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தை ஒருவரிடமும், 40 ஆயிரம் ரூபா பணத்தை பிறிதொருவரிடமும் பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (110)

# கணினி அன்பளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்களின வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு கடற்தொழில் உபகரணங்களை வழங்கி வரும் பாசிக் நிறுவனம் கணினி இயந்திரம் ஒன்றை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சமாச அங்கத்துவ சங்கங்களுக்கான மாதாந்தக் கூட்டத்தில் பாசிக் நிறுவனப் பிரதிநிதியினால் சமாசத் தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸிடம் கணினி இயந்திரம் கையளிக்கப்பட்டது. (70)

# பொலிஸாருக்கு எதிராக குவியும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக பொதுமக்களின் நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள், பொலிஸ் ஆணைக்குழு தொழிற்படாத காரணத்தால் கவனிக்கப் படாமல் குவிந்து கிடப்பதாக பொலிஸ் ஆணைக்குழு சார்பில் தகவல் தரவல்ல ஒருவர் கூறினார்.

18 ஆவது திருத்தத்தின் பின் பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரம் மிகவும் குறைக்கப்பட்டுவிட்டது. ஆணைக்குழுவிடம் இருந்து பல அதிகாரங்கள் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கும் பொலிஸ் மாஅதிபருக்கும் மாற்றப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே தெரிவித்தார்.

2009 .ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதியுடன் ஆணையாளர்களின் பதவி முடிவுக்கு வந்ததுடன், ஏனைய முன்னைய தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்துவிட்டதாக ஆரியதாஸ குரே குறிப்பிட்டார்.

18 ஆவது திருத்தத்தின்படி, பொலிஸ் கான்ஸ்டபிளிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் வரையிலான சகல பொலிஸ் ஊழியர்களினதும் நிர்வாகம் பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் அத்தியட்சர்களிலும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பவை மட்டுமே பொலிஸ் ஆணைக்குழுவின் பொறுப்பில் உள்ளதென அவர் கூறினார்.

# கணினி மயமாகும் வங்கிக் கிளை

(ஊர்காவற்துறை)

இலங்கை வங்கியின் ஊர்காவற்துறை கிளை கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி மக்கள் விரைவான வங்கிச் சேவையை பெற முடியும் என வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் இப்பகுதி மக்கள் வேலணைக்குச் சென்று அங்குள்ள இலங்கை வங்கி கிளை மூலமே கணனி மயப்படுத்தப்படட் சேவையை பெற்று வந்தனர். தற்போது இக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (14)

## மஹோற்சவம்

(பருத்தித்துறை)

புலோலி பசுபதீஸ்வர தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஜுலை மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (109)

## பதவிப் பிரமாணம்

(பருத்தித்துறை)

சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுக்கான பதவிப் பிரமாணப் பத்திரம் வழங்கலும் கலந்துரையாடல் நிகழ்வு இன்று முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (109)

## பொதுக் கூட்டம் நடாத்தப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் கீழ் இயங்கும் 15 பிரிவுகளும் தத்தமது பிரிவு பொதுக்கூட்டங்களை ஆடி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி பிரிவு பொதுக்கூட்ட அறிக்கைகளைத் தமக்கு அனுப்பி வைக்கும்படி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் கு.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (70)

# மார்பகப் புற்றுநோய் யாழில் அதிகரிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மார்பகப் புற்று நோய்க்கு உள்ளாகும் பெண்களின் தொகை அதிகரித்திருப்பதாகவும், இதனால் இந்நோய்க்கு சிகிச்சை பெற்று வருபவர்களின் தொகையும் கணிசமான அளவு அதிகரித்திருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தினமும் மார்பகப் புற்றுநோயின் தாக்கத்துக்கு உள்ளான பெண்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் இவர்களில் குடும்பப் பெண்களில் 38 வயதுக்கும் 52 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் அதிகளவில் மார்பகப்புற்று நோய்க்கு உள்ளாகியிருப்பதாக இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய்த்தாக்கமுள்ள பெண்கள் உடனடியாக மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு தெரிவித்துள்ளது.

## கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் - கள்ளித்தெரு நெல்வயல் மத்தியில் அமர்ந்து அருள் பாலிக்கும் ஆண்டவேல் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகள் நேற்றுக் காலை 10 மணிளவில் இடம்பெற்றன. (50)

நன்றாக நடப்பதற்கு முன் ஒருகுழந்தை விழுவதைப்போல் தோல்விகள் அனைத்தும் வெற்றிப்படிகளே. ஆகவே தோல்லியைக்கண்டு, ஏமாற்றமோ, மனர்த்தளர்ச்சியோ அடையத்தேவையில்லை.

- மாதா அமிர்தானந்தமயி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# வெட்கமாவது வேண்டும்

முதலில் கூட்டமைப்பு எம்பீக்கள் மூவர் அரசாங்கத்துடன் சேரப் போகிறார்கள், அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் அதுபற்றிக் கதைத்துவிட்டார்கள் என்று செய்தி வந்தது. சம்பந்தப்பட்ட மூன்று எம்பீக்களும் அதை வன்மையாக மறுத்திருந்தார்கள். தமிழ் மக்களின் விடுதலையை நோக்கியே இயங்கிக் கொண்டிருக்கிறோம், ஒருபோதும் விலைபோக மாட்டோம் என்று உறுதியாகத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தார்கள்.

பிறகு சில நாட்கள் கழித்து, மீண்டும் கூட்டமைப்பு எம்பீக்கள் பஸிலுடன் இரகசியமாகக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள், இம்முறை அரசுடன் இணையச் சம்மதம் தெரிவித்திருப்பவர்கள் நால்வர் என்று செய்திகள் வந்தன. அச்செய்தியில் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை ஆதலால் யாரும் மறுப்பறிக்கை விடவில்லை.

ஆனாலும், இன்ன இன்னாருக்கு அரசியலை விட வியாபாரம்தான் முக்கியம், ஆகவே அது இன்னின்னாராக இருக்கலாம் என்று மக்கள் தங்கள் யூகங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். மேடைகளிலும், அறிக்கைகளிலும் நெருப்பெடுக்கும் விரோத பாவத்துடன் பேசுபவர்கள், நரம்புகளை முறுக்கேற்றிவிடுபவர்கள், நாடாளுமன்ற கொரிடோர்களிலும் அமைச்சர்கள் பங்குபற்றும் கூட்டங்களிலும் சிங்கள அமைச்சர்கள், எம்பீக்களுடன் பேசும்போது அசட்டுச் சிரிப்புகளுடன் குழைந்து நெளிவது ஏன் என்ற கேள்வியுடன் அந்தக் காட்சிகள், தகவல்கள் சாதாரண மக்களைச் சங்கடப்படுத்துவதுண்டு.

இப்படியான ஒரேவித செய்திகள் திரும்பத் திரும்ப வரும்போது, 'நெருப்பில்லாமல் புகை வராது' என்று ஊர்வழக்கில் சொல்லுவார்கள். குறிப்பாக அமைச்சர் பஸிலுடன் அப்படி இவர்கள் என்னதான் அடிக்கடி இரகசியமாகக் கதைத்துக் கொள்கிறார்கள் என்ற கேள்வியிலிருந்தே மேற்கண்ட சந்தேகங்கள் முளைக்கின்றன, செய்திகளாக வருகின்றன.

இப்போது பிரபல இணையத்தளம் ஒன்றில், கூட்டமைப்பின் முக்கிய எம்.பி ஒருவர் அமைச்சர் பஸிலை கடந்த ஒருமாத காலத்துக்குள் குறைந்தது இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசியுள்ளார் என்று தகவல் வெளியிட்டுள்ளது. இச்சந்திப்பு தீர்வுப்பேச்சுவார்த்தை சம்பந்தமானதோ அல்லது தமிழ்மக்களின் பிரச்சினைகள் சார்ந்ததாகவோ அல்ல என்றும் அது எழுதியுள்ளது.

தமிழ்மக்களின் ரோச நாண்களைத் தெறிக்க வைக்கும் அளவுக்குப் பேசக் கூடிய அந்தக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் கேட்டு வருவது தன் குடும்பத்திற்கும் தனிப்பட்ட பொருளாதார ஈட்டத்திற்குமான இரண்டு கோரிக்கைகளை என்று அந்த இணையத்தளச் செய்தி கூறுகிறது. தனது மகளின் உயர்கல்விக்கான புலமைப்பரிசில் வாய்ப்பு, மற்றும் தனக்கு நெருக்கமான ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வடக்கின் வேலைத்திட்டங்களில் சிலவற்றையேனும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளையே அவர் தனது சந்திப்புகளில் கேட்டு வருகிறார் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக அந்தக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரை, குறிப்பிட்ட இணைய செய்திச் சேவை தொடர்புகொண்டு கேட்டதாகவும் அதற்கு அவர் தனது மகளின் கல்வி தொடர்பான செய்தியை உறுதிப்படுத்தியதாகவும், அதனைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாகவும் அந்தச் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

நமக்குச் சில கேள்விகள் எழுகின்றன. குடும்பநலன், சுயலாபம் என்பதெல்லாம் ஒருபக்கம் இருந்தாலும், அரசாங்க அமைச்சர்களிடம் தனிப்படப் பேசும்போது பொதுமக்களின் இன்னல்கள் அவதிகள் எல்லாம் உங்கள் நினைவுக்கு வருவதில்லையே ஏன்? நாடாளுமன்ற முன்கதவால் செல்வதற்கு மக்கள் ஆணை ஏகப்பிரதிநிதித்துவ ஆணை என்றெல்லாம் கோரும் நீங்கள் பின்கதவால் சென்று கோருவது என்னென்ன? சரி, பின் கதவால் சென்று பார்க்கும் போதும், அவர்களுடன் ஒரே மேடையில் தோன்றும் போதும் கூழைக்கும்பிடு போட்டுப் புகழ்மொழி பேசும் நீங்கள் பத்திரிகை அறிக்கைகளிலும் மேடைப் பேச்சுக்களிலும் அவர்களைத் திட்டுவதும் வெறுப்பேற்றும் எதிர்ப்பைக் கக்குவதும் ஏன்?

மக்களை உணர்ச்சிவசப்படுத்தி வைத்துக்கொண்டு அவர்களைக் கஷ்டப்பட விட்டுவிட்டு, ஆட்சியாளர்களிடம் நீங்கள் தனியே சென்று உங்கள் சொந்தத் தேவைகளுக்காகக் குழைந்து தவழ்வதில் உங்களுக்கு வெட்கமோ, குற்ற உணர்ச்சியோ ஒருபோதும் ஏற்படாதா?

– ஆசிரியர்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்காக யாழ். நகரில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் பால்நிலை சமத்துவமின்மைக் கெதிராகவும் நேற்று யாழ் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக இரண்டு மணி நேர கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றுள்ளது.

நல்லூர் செட்டித்தெருவில் அமைந்துள்ள மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் யாழ். பிரதேச பெண்கள் அமைப்பினர் மற்றும் மனித உரிமைகள் இல்லத்தினர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்று முற்பகல் 10.00 மணியளவில் ஆரம்பமாகிய இக் கவனயீர்ப்புப் போராட்டம் நண்பகல் 12.00 மணிவரை நீடித்தது.

இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்புத்துணிகளினால் வாய்களைக்கட்டியும் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளைக்குறிக்கும் சுலோக அட்டைகளை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நேற்று யாழ். நகரில் பல பகுதிகளிலும் யாழ். மத்திய பேருந்து நிலையத்தைச் சூழ படையினரது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், மத்திய பேருந்து நிலையத்தில் பொலிஸாரும் நிறுத்தப்பட்டிருந்தனர். (பா)

# கிளிநொச்சியில் மீள்குடியேறிய மக்கள் வாழைச் செய்கையில் தீவிர ஆர்வம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழைப்பயிர்ச் செய்கையில் மக்கள் தீவிரஅக்கறை காட்டி வருவதினால் இதன் மூலம் சிறந்த வருமானத்தையும் அவர்கள் ஈட்டிவருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்பாலான கிராமங்கள் வாழைப்பயிர்ச்செய்கைக்கு ஏற்ற மண்வளத்தைக் கொண்டிருக்கின்றன.

இப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியேற்றப்பட்டபோது வாழைப்பயிர் பெரும்பாலும் அழிவடைந்த நிலையில் இருந்தது. மீளக்குடியேறிய மக்கள் தாம் குடியேற்றப்பட்ட நாள் தொடக்கம் படிப்படியாக வாழைச்செய்கையில் ஈடுபட்டு வந்தனர் முதலில் இவற்றை வெளிமாவட்டங்களில் இருந்து பெற்று அவற்றை பயிரிட்டு வந்தனர்.

இவ்வாறு படிப்படையாக வாழைஉற்பத்தி அதிகரித்தது மீள்குடியேற்றம் இடம்பெற்று ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில் தற்போது வாழைச் செய்கை தீவிரம் பெற்றுள்ளது.

மக்கள் தமது சொந்த முதலீட்டினைச் செலுத்தி இவற்றைக் கொண்டுவந்து பயிரிட்ட அதேவேளை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் இந்த உற்பத்திக்கான வாய்ப்பையும் அதனை பொதுமக்களுக்கு கொண்டுவந்து வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளன. இதன் மூலம் துரிதகதியில் இந்த உற்பத்தி நடைபெற்றது.

தற்போது இவற்றினை பயிரிட்ட மக்கள் அதன் மூலம் நன்மையடையத்தொடங்கியுள்ளனர். இதனால் நம்பிக்கையுடன் மேலும் வாழைச் செய்கையில் மக்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

இந்தச் செய்கையில் ஈடுபடும் மக்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், தமக்குத் தேவையான போசாக்கினையும் பெற்றுக்கொள்கின்றனர். (ஜெ)

## விரிவுரையாளருக்கான ஊதிய உயர்வு; அடுத்தவாரம் காணப்படும் தீர்வு

பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் வேதன பிரச்சினை குறித்து அடுத்த வாரம் அளவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

விரிவுரையாளர்களின் சங்கத்தினால் புதிய வேதன அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும்,

இது தொடர்பாக அடுத்த வாரம், கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என அவர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பென உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிய உயர்படிப்புகள் கல்லூரி யாழில் திறந்து வைப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் லண்டன் மேற்றோ பொலிற்றன் கல்லூரி என்ற பெயரில் புதிய உயர்படிப்புகள் கல்லூரி ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இல. 197, அரசடி வீதியில் அமைந்துள்ள இக்கல்லூரியை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தேசியக்கொடியை ஏற்றிவைத்து சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டி கல்லூரியைத் திறந்து வைத்தார்.

இக்கல்லூரியின் தலைமையகம் கொழும்பில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (10)

# கிளிநொச்சி விளையாட்டு மைதானம் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பொது விளையாட்டு மைதானம் எண்ணூறு மில்லியன் ரூபாய் செலவில் வடமாகாணத்தின் முதன்மையான விளையாட்டரங்காகத் தரமுயர்த்தப்பட்டு இலங்கையின் முன்னணி மைதானங்களில் ஒன்றாக விரைவில் அமைக்கப்படும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.





கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்து விளையாட்டுகளுக்கும் பயிற்சி வழங்கும் மைதானமாக மாற்றப்படுவதோடு, இலங்கையில் எதிர்வரும் காலத்தில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் வடமாகாண வீரர்கள் இந்த மைதானத்தில் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வடமாகாணத்தைச் சேர்ந்த வீரர்களுக்காக இந்த மைதானம் சிறந்த பயிற்சி அரங்காக அனைத்து வசதிகளையுடையதாக மாற்றமுறும். இந்த மாவட்டத்தின் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவது என்பதற்காக கிராம மட்டத்திலான விளையாட்டுக் கழகங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

அதற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி அவற்றினுடாக விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் ஊக்கப்படுத்தி வருகிறோம் எனத் தெரிவித்தார்.






வடமாகாண ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் சமாச நிதியில் ரூபா 65 லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாநாட்டு மண்டபத்தை கடந்த சனிக்கிழமை சமாசத்தின் முன்னாள் தலைவர் தி.அமிர்தநாதர் நாடா வெட்டித் திறந்துவைப்பதையும், மாநாட்டு மண்டபத்தின் முழுத் தோற்றத்தையும் காணலாம். (27)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வாழ்வாதாரம் கற்றோருக்கான உதவித்திட்டத்தை மேற்பார்வை செய்து ஆய்வு நடத்துவதற்காக சமூகவியல் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற விரும்புவோர் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை தலைவர், யாழ்ப்பாணம் வணிகர் கழகம், 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 25.06.2011க்கு முன்பாக அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## அழகியல் பாடநெறி வகுப்புகள் ஆரம்பம்

(யாழ். நிருபர்)

காரைநகர் - கிழவன்காடு கலாமன்றத்தினால் நாடகமும் அரங்கியலும் இலவசஅழகியல் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த பௌர்ணமி தினத்தன்று சம்பிரதாய பூர்வமாக இக்கற்கை நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழவன்காடு கலாமன்றத்தினால் ஏற்கனவே சங்கீதம், நடனம், சித்திரம், மிருதங்கம், வயலின், பண்ணிசை, அறநெறி, மாலைகட்டுதல், கோலம் போடுதல், தியானம், யோகாசனம் ஆகிய பயிற்சிகள் இலவசமாக பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

தியானம், யோகாசனம், பண்ணிசை போன்ற பயிற்சிநெறிகளில் ஆர்வமுள்ள ஆண்,பெண் இருபாலரும், கலந்து கொள்ளலாமென கலாமன்றத் தலைவர் ந. சோதிநாதன் தெரிவித்துள்ளார்.(10)

## மாற்று வலுவுள்ள 34 பேருக்கு உதவி

(இணுவில்)

சங்கானைப்பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 27 பயனாளிகள் மாற்று வலுவுள்ளோருக்கான பண உதவித் திட்டம் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் 3ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னர் 2007ஆம் ஆண்டு 3 பயனாளிகளும், 2009ஆம் ஆண்டு 4 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். இவர்களுடன் சேர்ந்து மொத்தமாக 34 பயனாளிகள் பயன்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (115)

## துர்நாற்றம் வீசுகிறது கோட்டை சேற்றுக் குவியல்

(யாழப்பாணம்)

யாழ். கோட்டை அகழியில் இருந்து அகற்றப்படும் கழிவுச் சேறு முற்றவெளியில் கொட்டப்பட்டு வருகின்றது. வீரசிங்கம் மண்டப பின்பக்க தாழ்ந்தஇடம் மற்றும் முற்றவெளியில் தாழ்ந்த இடங்களுக்கும் இந்தச் சேறு கொட்டப்பட்டு நிரவப்பட்டு வருகின்றன.

இந்தக் கழிவு சேற்றினால் இப்பகுதியில் துர்நாற்றமும் வீசுகின்றது. (வி)

# இளையோரையும் சமூகசேவையில் இணைத்து விருதுகளும், பட்டங்களும் வழங்கவேண்டும்

## -ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்



(யாழ். நிருபர்)

சமூக சேவைக்கான விருதுகளையும், பட்டங்களையும் பெற்றுக்கொள்பவர்கள் எதிர்காலத்தில் மேலும் சமூகத்திற்குச் சிறந்த முறையில் சேவையாற்றி இளைய தலைமுறையினரையும் சமூகசேவையில் இணைத்து அவர்களையும் விருதுகளும், பட்டங்களும் பெறச் செய்யவேண்டும் என்று ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) குறிப்பிட்டார்.

யாழ். கொட்டடி சனசமூக நிலையம் நடத்திய கலைஞர்கள் மற்றும் சமூக சேவையாளர்களுக்கான விருதுவழங்கும் விழாவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சனசமூக நிலையத்தின் தலைவர் நா. தனேந்திரன் தலைமையில் கொட்டடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

இந்த மண்ணில் மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்களுக்காக தம்மை அர்ப்பணித்து பணி புரிந்த இத்தனை சேவையாளர்களுக்கும் விருது வழங்கி பாராட்டு விழா எடுப்பது மகிழ்ச்சி தருகிறது சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்படும் போதுதான் மேலும் பல சமூகசேவையாளர்கள் உருவாகமுடியும். இவர்களைக் கௌரவிப்பதன் ஊடாக சனசமூக நிலையம் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்கிறது.

கடந்த பல வருடங்களாக நடைபெற்று வந்த யுத்தக் கொடுமைகளால் எமது மக்கள் பலதுன்பங்களை அனுபவித்து வந்துள்ளார்கள். இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலைய்யில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தப்பிப் பிழைத்து பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்துவரும் மக்களின் குறைகளை எம்மால் இயன்றவரை நிவர்த்திசெய்து வருகிறோம்.

நாம் என்றுமே மக்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மக்களை விட்டு ஒருபோதும் ஓடமாட்டோம் எமது பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் சந்தோசமாக சுபீட்சமாக, சுதந்திரமாக தொழில் செய்து வாழ்வதற்கான வழிமுறைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் செய்துவருகிறோம் எனவும் கூறினார். (10)

# காபற் வீதியாக மாறும் காரைநகர் சுற்றுவீதி

(காரைநகர்)

காரைநகர் சுற்று வீதியில் 10 கிலோ மீற்றர் தூரமான வீதிக்கு காபற் போடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி நடை பெற்ற பிரதேச ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டத்தில் இவ்வீதிகளின் அவல நிலை பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திஅமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வீதிஅபிவிருத்தி அதிகார சபையினருக்கு விடுத்த பணிப்புரைக்கு அமைவாக இவ்வீதிகள் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன.

மேற்படி இவ்வீதி முழுமை யாக ஆங்காங்கே குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன், வாரிவளவில் இருந்து துறைமுகம் வரையான வீதி பாரிய சேதத்துக்குள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதிகளால் பயணம் மேற்கொள்ளும் பயனாளிக ளுக்கு, இ.போ.ச மற்றும் தனி யார் சிற்றூர்திகள் மற்றும் வாகனச் சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில் சுமார் 10 கிலோ மீற்றர் வீதிக்கு காபற் போட முடியும் என வீதி அபிவிருத்திச்சபை அதிகாரி தெரிவித்ததை அடுத்து,இவ வீதியின் புனரமைப்பு வேலைகளை உடன்ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (86)

## ஒஸ்மானியாக்கல்லூரியில் மீலாத்விழா இன்று

(யாழ்.நிருபர்)

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாண"மீலாத்விழா" இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.எஸ். ஏ.எம்.முபாறக் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், யாழ்ப்பாண கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை. இரவீந்திரன் மற்றும் தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ அதிதியாக தொழில் நுட்ப ஆலோசகர் எம்.பவளகாந்தன் கலந்து கொள்கிறார். அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவர்கள் வழங்கும் கோலாட்டம், வில்லிசை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (10)

# உபகரணங்கள் அன்பளிப்பு

(காரைநகர்)

2011ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திகதியில் இருந்து காரைநகர் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கும், கிராம அபிவிருத்திச்சங்கங்களுக்கும், உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மேற்படி உபகரணங்களை வழங்கினார். அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவினாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோரினாலும் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டன. காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஒளிச்சுடர், அம்மாள், இளஞ்சுடர் ஆகிய விளையாட்டுக்கழகங்களும், தோப்புக்காடு, பிட்டி எல்லை ஆகிய கிராம அபிவிருத்திச்சங்கங்களும், காரைமத்திமாதர் கிராம அபிவிருத்திச்சங்கமுமே தளபாட உபகரண உதவிகளை பெற்றுக் கொண்டனர். (86)

# திண்மக்கழிவுகளினால் மாசடையும் சுற்றாடல்

(யாழ். நிருபர்)

காரைநகர் உதவி அதிபர் பிரிவுக்குட்பட்ட வேதரடைப்பு கிராமத்தில் மக்கள் வசிக்காத காணிகளில் திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதால் இப்பிரதேசத்தில் சுற்றாடல் அசுத்தமடைவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச சுகாதார பரிசோதகர் அவற்றைச் சென்று பார்வையிட்டதாகவும் பொதுத்திட்ட வேலைகள் மூலம் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ள போதிலும், தொடர்ந்தும் இறந்த விலங்குகளின்உடல்களும் மற்றும் வீட்டு சமையலறைக் கழிவுகளும் ஆளில்லாத காணிகளில் வீசப்படுவதால் தமது பிரதேச மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படுவதாக வேதரடைப்பு கிராம முன்னேற்றச்சங்கத்தலைவர் கவலை தெரிவித்துள்ளார். (10)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுகாதார, வைத்திய சேவைகளை மேம்படுத்த 53 மில்லியன் ஒதுக்கீடு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த கிராமங்களில் வைத்திய சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கென 53 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்(என்றிப்) மருதங்கேணிப் பிரதேச வைத்தியசாலையில் மருத்துவ மாதுவுக்கான விடுதி அமைப்பதற்கு 3.83 மில்லியன் ரூபாவும், உடுத்துறைக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு 4.07 மில்லியன் ரூபாவும், யு.என்.டி.பி நிறுவன நிதி உதவியுடன் செம்பியன்பற்று வடக்கு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைப்பதற்கு 5.15 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்துடன் மருதங்கேணிப் பிரதேச வைத்தியசாலை கட்டட புனரமைப்புக்கு 24 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, வேலைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், அம்பன் அரசினர் வைத்தியசாலை புனரமைப்புக்கென மேர்சி மலேசியா நிறுவனத்தால் 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு திருத்த வேலைகள் 90 வீதம் வரை முடிவடைந்துள்ளன.

கடந்த காலப் போர் நடவடிக்கைகளினால் முற்றாகச் சேதமடைந்த முள்ளியான் அரசினர் வைத்தியசாலை, வைத்தியர் தங்கும் விடுதி ஆகியன அமைப்பதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (70)

# மரக்கறிப் பயிர்களில் தீவிர பூச்சித் தாக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மரக்கறிப் பயிர்களில் தீவிரமான பூச்சித் தாக்கம் ஏற்பட்டுள்ளன. இதனால் இதனைக் கட்டுப்படுத்தும் தீவிர நடவடிக்கைகளில் விவசாயிகள் இறங்கி அதனைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கிளிநொச்சியில் மீள்குடியேறிய மக்கள் வீட்டுப் பயிர்ச் செய்கையாக மரக்கறிப் பயிர்ச் செய்கையில் பரவலாக ஈடுபட்டு வருகின்றனர். இதன்மூலம் தமது தேவைகளை ஈடுசெய்து வருவதுடன் சிறிதளவு பொருளாதார ஈட்டலும் பெற்று வருகின்றனர்.

சிறு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தம்மாலான உதவிகளையும், மூலதன வளங்கலையும் வழங்கியிருந்தன. இவைகள் மூலம் மிகவும் ஆர்வமுடன் இம்மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர்.

மரக்கறிப் பயிர்ச்செய்கையும் இதன்மூலம் முன்னேற்றம் கண்டிருந்தது. ஆயினும், கடந்த சில நாட்களுக்கு முன்பதாக பயிற்றை போன்ற மரக்கறிப் பயிர்களில் தீவிரமான பூச்சித் தாக்கம் ஏற்பட்டது. இதனால்அதன் மூலம் பெறப்படும் வருமானத்திலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் தீவிர மாற்று நடவடிக்கைகள் மூலம் இத்தார்க்கத்தினையும் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (ஜெ)

# கல்வித் தரத்தை மேம்படுத்த ஆளுநர் தலைமையில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயும் வகையிலான கூட்டம் ஒன்று அண்மையில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநரின் உப அலுவலகத்தில் நடைபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர். இதன்போது மாகாணத்தின் கல்வித்தர செயற்பாடு குறித்தும் அதனை மேம்படுத்துவது தொடர்பாகவும் விரிவான முறையில் ஆராயப்பட்டது. அத்துடன் கல்வித்தரத்தை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளும் ஆளுநரால் வழங்கப்பட்டன.

# காரைநகர் துறைமுகத்திலிருந்து பேருந்து சேவையை ஆரம்பிக்குக

## பாதிக்கப்படும் பயணிகள் கோருகின்றனர்

(யாழ்.நிருபர்)

இலங்கை போக்குவரத்துச் சபை பேருநது வண்டிகள் காரைநகர் டிப்போவில் இருந்து நேரடியாக சேவையை ஆரம்பிப்பதாகவும், அவை துறைமுகம் பஸ் நிலையத்திற்குச் செல்வதில்லை என்றும், இதனால் அரை மைல் தூரம் பயணிகள் கால்நடையாக வந்து டிப்போவடியில் பஸ் ஏறவேண்டியுள்ளதாக வும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக காரைநகர் இ.போ.ச டிப்போ பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சிலவேளைகளில் மட்டுமே அவ்வாறு நடைபெறவதாகவும், பொதுவாக துறைமுகத்திலிருந்தே சேவைகள் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார்.

ஆளணிப் பற்றாக்குறை, போதிய பேருநது வசதிகள் இன்மை, தனியார் பேருந்துகளுடனான போட்டி போன்ற காரணங்களால் மக்களுக்கு உரிய நேரத்தில் நிறைவான சேவையை வழங்க வேண்டும் என்பதற்காக சிலவேளைகளில் நாம் டிப்போவிலிருந்து நேரடியாக சேவையை ஆரம்பிக்கிறோம்.

அத்துடன் போதிய பேருந்துகளை வழங்கி சாரதி, நடத்துனர் போன்ற ஆளணிப் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்தால், எல்லாப் பேருந்துகளையும் துறைமுகம் சென்று சேவையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (10)

# வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தில் 2100 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 2100 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயி கள் சிறுபோகச் செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

சிறுபோகம் மேற்கொள்ளக்கூடிய பிரதேசத்தில் விவசாயிகளுக்கு வயல்கள் பங்கிட்டு வழங்கப்பட்டு தற்போது செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு வசதியாக வங்கிகள் கடனுதவிகளை வழங்கியுள்ளன.

இப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு, விவசாய நடவடிக்கைகள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், சிறுபோகச் செய்கை மேற்கொள்ளக்கூடிய நீர்ப்பாசனத்திற்குரிய பகுதிகளில் 2100 ஏக்கர் வயல் செய்கைக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. (110)

# கோடையிலும் வற்றாத கிளிநொச்சி கிணறுகள்

(கிளிநொச்சி)

கோடைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயர்வடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பெரும்பாலும் இங்கு இக்காலப் பகுதியில் கிணறுகள் துரிதமாக வற்ற ஆரம்பிக்கும். இதனால் இம்மாதம் தொடக்கம் நீரினைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகள் தோன்ற ஆரம்பித்துவிடும். முன்னர் இக்காலப் பகுதிகளில் பலதடவைகள் தமக்கான நீரினைப் பெறுவதிலேயே மக்கள் இடர்களை எதிர்கொள்வது வழக்கம்.

ஆயினும், காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக மழைவளம் தாராளமாக கிடைத்திருந்தது. இதனால் கடந்த எட்டுமாத காலப்பகுதிக்குள் பல தடவைகள் கிணறுகள் நிரம்பி வழிந்தன. இவ்வாறான நிலையில் கோடைகாலமாகிய இக்காலப் பகுதியிலும் மிகவும் உயர்வான நிலையில் கிணறுகளில் நீர்மட்டம் காணப்படுகின்றது. (ஜெ)

# போசாக்கு, சத்துணவு விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதற்கு கண்காட்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் பொதுமக்களிடையே போசாக்கு மற்றும் சத்துணவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தருமபுரம் மகா வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இக்கண்காட்சி இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பி.கார்த்திகேயன் கலந்து கொண்டு கண்காட்சி யைத் தொடக்கி வைத்தார்.

கண்டாவளைப் பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன், பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், இராணுவத்தினர், பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர். கண்காட்சி தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்துரையில்,

இப்பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள



மக்களின் போசாக்குத்தரத்தை மேம்படுத்தும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இக் கண்காட்சி நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(21.06.2011 – செவ்வாய்க்கிழமை)

## பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்
ஆனி 06 ஆம் நாள்.
இராகுகாலம 2.54–4.24, சுபநேரம் 10.24 –11.54
நட்சத்திரம் சதயம் முழுவதும்
திதி: ஷஷ்டி பி.இ. 3.56 வரை. கரிநாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணவரவு, குடும்பத்தில் நிம்மதி, அயலவர் தொல்லை, நண்பர் வருகை, மனமகிழ்ச்சி.

**ரிஷபம்:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், ஆலய வழிபாடு, தேக ஆரோக்கியம், கடன் தொல்லை.

**மிதுனம் :–** பண வரவு, தேக ஆரோக்கியம், காரிய சித்தி, மன மகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம்.

**கடகம்:–** பணக் கஷ்டம், தேக நலம் பாதிப்பு. நண்பர் தொல்லை, கடன் வரவு, குடும்பத்தில் குழப்பம்.

**சிம்மம்:–** பண விரயம், தேக நலம் பாதிபபு, மருத்துவச் செலவு, நண்பர் வருகை.

**கனனி :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய சித்தி, தேக ஆரோக்கியம், பண வரவு, தியாகம்.

**துலாம் :–** பணவரவு, நண்பர் வருகை, தேக ஆரோக்கியம், குடும்பததில் குதூகலம், மனமகிழ்ச்சி.

**விருச்சிகம்:–** பண வரவு, நண்பர் வருகை, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் குதூகலம், மனமகிழ்ச்சி.

**தனுசு:–** தேக ஆரோக்கியம், பண வரவு, தூரத்திலிருந்து நல்ல செய்தி, நண்பர் வருகை, லாபம்.

**மகரம்:–** குடும்பத்தில் குதூகலம், பண வரவு, தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை, தியாகம்.

**கும்பம் :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், விபத்து வரலாம், நண்பர் வரவு, நிம்மதிக் குறைவு.

**மீனம்:–** பண நஷ்டம், உடல் நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, நண்பர் தொல்லை, அவலம்.

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டு

# ஹொக்கி 2 பிரிவுகளிலும் யாழ். மாவட்டம் முதலிடம்

(வவுனியா)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப் போட்டியில் இரு பிரிவுகளிலும் யாழ். மாவட்ட அணிகள் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டன.

இப்போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை உடுவில் மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ். குளமங்கால் றோ.க.த.க. பாடசாலையும், மூன்றாமிடத்தை வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியில் ஐந்து இடங்களை யாழ். மாவட்ட பாடசாலைகள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12)

# கூடைப்பந்து யாழ். மாவட்டம் முழுமையாக கைப்பற்றியது

(வவுனியா)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் முழு இடங்களையும் யாழ். மாவட்ட பாடசாலைகள் அணிகள் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது.


வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்றும் நேற்று முன்தினமும் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ். மத்திய கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தை யாழ். இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடமும், இரண்டாமிடத்தை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியும், மூன்றாமிடத்தை யாழ். உடுவில் மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

வெற்றியீட்டியவர்களுக்கான வெற்றிக் கேடயங்களையும், சான்றிதழ்களையும் வடமாகாண வர்த்தக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வன் வழங்கிக் கௌரவித்தார். (12)

# கிளிநொச்சி மாவட்ட மட்ட விளையாட்டு கரைச்சிப் பிரதேச செயலகம் சம்பியன்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளின் இறுதி நாள் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. பிரதேச ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அணிகளும் போட்டியாளர்களும் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டனர். இந்த இறுதிப் போட்டிகளின் போது அதிக புள்ளிகளைப் பெற்று கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

கிளிநொச்சி நகரின் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு மாவட்டத்தின் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமை வகித்தார்.

இந்தப் போட்டியில் இரண்டாமிடத்தைக் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவும் மூன்றாமிடத்தைப் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவும் பெற்றன.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், வடமாகாண விளையாட்டுத் துறை தொழில்நுட்ப ஆலோசர் விமலராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சிறிநிவாசன், கண்டாவளை பிரதேச செயலர் சத்தியசீலன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் முகுந்தன், கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி சதானந்தன், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன், பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பெருந்தொகையான பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

விளையாட்டுச் செய்திகள்

# கணாதீபன் புதிய சாதனை

(யாழ்ப்பாணம்)

கோலூன்றிப் பாய்தலில் கோபாலன் கணாதீபன் புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார்.

மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியிலேயே அவர் இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தெல்லிப்பளை பிரதேச செயலகம் சார்பாக பங்குபற்றிய கோபாலன் கணாதீபன் கோலூன்றிப் பாய்தலில் 3.45 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

இவர் பாடசாலை மட்டத்தில் கோலூன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றவர் என்பதும், தற்போது விளையாட்டுத்துறை சார்ந்து இலங்கை விமானப் படை வீரராக கடமை புரிகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# செல்வா அணி வெற்றி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் வடக்கு உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினால் கால்பந்தாட்டம், கிரிக்கெட், வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

முதல் நாள் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் கட்டைக்காடு சென் மேரிஸ் அணியும், குடத்தனை செல்வா அணியும் மோதிக் கொண்டன. இதில் செல்வா அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அண்மையில் ஆரம்பமான இப்போட்டி நிகழ்வுகளில் 55ஆவது படையணி சிவில் மற்றும் பொதுமக்கள் தொடர்வு அலுவலகப் பொறுப்பாளர் லெப். கேணல் சில்வா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (70)

# கிரிக்கெட்டில் சம்பியானது செலிங்கோ இன்சூரன்ஸ்

(யாழ்ப்பாணம்)

**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 90ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி யில் செலிங்கோ இன்சூரன்ஸ் அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் இப்போட்டி நடைபெற்றது. அணிக்கு ஆறு பேர் கொண்ட இப்போட்டி ஐந்து ஓவர்களைக் கொண்டதாகும். இறுதிப் போட்டியில் நெல்லியடி பொலிஸ் அணியும், நெல்லியடி செலிங்கோ இன்சூரன்ஸ் அணியும் மோதிக் கொண்டன.**

**நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பொலிஸ் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின் 70 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய செலிங்கோ இன்சூரன்ஸ் அணி குறித்த ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்து கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் நெல்லியடி இராணுவ அணியும், கரவெட்டி பிரதேச அணியும் மோதிக் கொண்டன. இதில் முதலில் ஆடிய இராணுவ அணி 72 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கரவெட்டி பிரதேச அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. (17)**

# யாழ். மாவட்ட விளையாட்டு தெல்லிப்பளை முதலிடம்



தெல்லிப்பளை பிரதேச செயலகம்



நல்லூர் பிரதேச செயலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிற்கிடையே நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகள் கடந்த 18, 19ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டிகளின் முடிவுகளின்படி தெல்லிப்பளை பிரதேச செயலகம் அனைத்துப் போட்டிகளிலும் 102 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டச் சம்பியானாகத் தெரிவானது. நல்லூர் பிரதேச செயலகம் 51 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாண பிரதேச செயலகம் 41 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி விஜய ரூபசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலகர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (74)

# லலித் மோடியின் பின்னணியே இந்திய வீரர் தடைக்குக் காரணம்?

(புதுடில்லி)

இலங்கையில் நடைபெறவுள்ள சிறிலங்கன் பிரிமியர்லீக் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய வீரர்கள் விளையாட அனுமதிப்பதற்கு இந்திய கிரிக்கெட் சபை மறுத்தமைக்குக்கு லலித் மோடி விவகாரம் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரை தளமாகக்கொண்ட சொமர்செட் என்டர்டெய்ன்ட்மன்ட் வென்சர்ஸ் எனும் நிறுவனத்திடம் இப்போட்டிகளை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பை இலங்க கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.

சொமர்செட் என்டர்டெய்ன்ட்மன்ட் நிறுவனத்திற்கும் லலித்மோடிக்கும் தொடர்பிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை சந்தேகிப்பதாலேயே சிறிலங்கன் பிரிமியர்லீக் போட்டிகளில் இந்திய வீரர்களை அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.பீ.எல். முன்னாள் தலைவரான லலித்மோடி இப்போது பிசிசிஐயினால் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை லீக்கின் பின்னால் மோடி இருப்பதற்கான அறிகுறிகளை நாம் கண்டுள்ளோம். ஐ.பி.எல்.லில் பணியாற்றிய அவரின் நபர்கள் பலர் இப்போது சொமர்செட் என்டர்டெய்ன்ட்மன்ட் வென்சர்ஸ் (எஸ்.ஈ.வி.) நிறுவனத்தின் ஊடக இலங்கை லீக்கை நிர்வகிக்கின்றனர் என பிசிசிஐ உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளை இலங்கை கிரிக்கெட் சபை நடத்தாமல் எஸ்.ஈ.வி. நிறுவனத்திடம் ஏற்பாட்டுப் பொறுப்பை ஒப்படைத்ததால் இப்போட்டிகளில் இந்திய வீரர்களை விளையாட அனுமதிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிசிசிஐ நேற்று முன்தினம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பளம் நிறுத்திவைப்பு

(ஹமில்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் சபை, வீரர்களுக்கு வழங்கவிருந்த ரூ.13.5 கோடி சம்பளத்தை நிறுத்தி வைத்துள்ளது.

இந்த நிதி ஆண்டு முதல் இந்த நடைமுறை கடைபிடிக்கப்படவுள்ளதால் வீரர்கள் இனி 2015 ஆம் ஆண்டுதான் சம்பளம் பெற முடியும்.

ஆனால் ஏன் இந்த நிறுத்தம் என்பதற்கான காரணங்களை நியூசிலாந்து கிரிக்கெட் சபை வெளியிடவில்லை.

## கடும் விமர்சனம்

மெக்லாரன் அணியின் நட்சத்திர கார்பந்தய வீரர் லீவிஸ் ஹமில்டன் கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளார்.

அவர் பந்தய பாதையில் ஓட்டும் ஸ்டைலை ரசிகர்களும் சக வீரர்களுமே விமர்சிக்கக்கூடிய நிலை ஏற்பட்டு உள்ளது. கடந்த 2 கிராண்ட் பிரீஸ் போட்டிகளில் 4 தனி மோதல் நிகழ்வுகளில் லீவிஸ் ஈடுபட்டு உள்ளார்.

26 வயது மொனாக்கோ வீரர் போட்டியில் பிலிப்பி மாசாவுடனும், பாஸ்டர் மால்டோனாடோவுடனும் மோதினர். சக அணி வீரரான ஜென்சன்பட்டனுடன் லீவிஸ் கார் மோதியது. அவரது கார் ஓட்டும் வேகம் குறித்து 3 முறை சம்பியனான நிகிலாடா கடுமையாக விமர்சித்தார். ஆனால் பிரிட்டன் அணிக்காக பயணிக்கும் லீவிஸ ஹாமில்டனை மெக்லாரன் அணி முதல்வர் மார்ட்டின் வொயிட் மார்ஸ் மற்றும் எப்-1 கார் உச்ச நட்சத்திரம் பெர்னி எக்ளஸ்டோன் ஆதரித்து உள்ளார்.

இந்த விவாதத்தில் லீவிஸ் ஹாமில்டனை அவரது தந்தை அந்தோனி ஹாமில்டனும் ஆதரித்து பேசி உள்ளனர். பார்முலா-1 கார் பந்தயத்தில் வினாடியை உள்ளடக்கும் நேரத்தில் தான் முடிவு எடுத்து செயற்படவேண்டி உள்ளது. அது சரியா? தவறா? என பார்க்க முடியாது. ஏனெனில் இது கார்ப்பந்தயம் என ஹாமில்டன் கூறினார்.

## அதிர்ச்சி தோல்வி

100 மீற்றர் அதி வேக ஓட்டப்பந்தயத்தில் சாதனை படைக்கும் ட்வைன் சேம்பர் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

சுவீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் உலக தடகள போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் பிரான்சின் வளர்ந்து வரும் நட்சத்திர வீரரான கிறிஸ்டோபே லேம்டய்ர் சாதனை வெற்றி பெற்றார்.

இந்த 21 வயது வீரர் 9.95 வினாடிகள் வேகத்துடன் உலகத்தர நிலையை எட்டினார். 33 வயது பிரிட்டன் வீரர் சேம்பர் 10.07 வினாடிகளில் இலக்கை ஓடி அடைந்தார். சாம்பியன் பட்டத்தை பெற இரு ஐரோப்பியர்களிடம் கடும் போட்டி ஏற்பட்ட போதும் பிரான்ஸ் இளம் வீரர் கிறிஸ்டோபே வெற்றியை தட்டி சென்றார்.

கிறிஸ்டோபே நீண்ட கால்கள், நல்ல உயரம் போன்ற சாதகமான அம்சங்களுடன் வெற்றியை எட்டினார் என சேம்பர் தெரிவித்தார்.

பிரிட்டன் அணி 4ஆவது இடத்தை பெற்றது. ரஷ்யா 213 புள்ளி எடுத்தது.

# சர்வதேச ருவென்ரி 20 போட்டி தகுதிச் சுற்றில் ஆறு அணிகள்

உள்நாட்டு அணிகளுக்கு இடையே சர்வதேச அளவில் நடைபெறும் சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரின் தகுதிச் சுற்றுப் போட்டிகளுக்கு 6 அணிகள் அழைக்கப்படவுள்ளன.

இந்தியாவில் ஐ.பி.எல். கிரிக்கெட் இறுதிப் போட்டி அணிகளான சென்னை சூப்பர் கிங்ஸ், ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூர், மும்பை இந்தியன்ஸ் அணிகள் ஏற்கனவே தகுதி பெற்றுள்ள நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சம்பியன் லீகில் இடம்பெற தகுதிச் சுற்றுப்போட்டிகளில் விளையாடவுள்ளது.

செப்டம்பர் 19 முதல் 21 ஆம் திகதி வரை இந்தத் தகுதி சுற்றுப்போட்டிகள் நடைபெறுகின்றன. செப்டம்பர் 23 ஆம் திகதி முதல் அக்டோபர் 9 ஆம் திகதி வரை சம்பியன் லீக் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் தொடங்குகின்றன.

ஏற்கனவே 7 அணிகள் தகுதி பெற்றுள்ள நிலையில், தற்போது இந்த 6 அணிகளில் 3 அணிகள் தகுதிச் சுற்றுகளிலிருந்து பிரதான போட்டிகளுக்குத் தகுதி பெறவுள்ளது.

கொல்கத்தா தவிர டிரினிடாட் அன்ட் டொபாகோ, நியூஸிலாந்திலிருந்து ஆக்லாந்து ஏஸஸ் அணி, இலங்கையிலிருந்து ஒரு அணி மற்றும் இங்கிலாந்திலிருந்து 2 அணிகள் என 6 அணிகள் இதில் பங்கேற்கின்றன. பிரதான சம்பியன் லீக் போட்டிகள் பெங்களூர், சென்னை, கொல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. தகுதிச் சுற்றுப் போட்டிகள் ஹைதராபாத்தில் நடைபெறுகிறது.

இதுவரை தகுதி பெற்றுள்ள அணிகள் வருமாறு: சென்னை சூப்பர் கிங்ஸ், ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூர், மும்பை இந்தியன்ஸ், தெற்கு அவுஸ் ரேலியா ரெட் பேக்ஸ், நியூசவுத்வேல்ஸ் ப்ளூஸ், வாரியர்ஸ், கேப் கோப்ராஸ் ஆகியவையாகும்.

## ஹைதருக்கு அபராதம்

(கராச்சி)

பாகிஸ்தான் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் சுல்கர்னைன் ஹைதருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 5 இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதம் ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற போட்டிகளில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் இடம் பெற்றிருந்த ஹைதர், போட்டியின் இடை நடுவில் லண்டன் சென்றமையாது ஒப்பந்தத்தை மீறும் செயலென தெரிவித்தே அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒழுக்காற்றுக்குழு இது தொடர்பான விசாரணைகளை நடத்தியிருந்ததுடன், ஹைதர் அபராதத்தை வழங்கவேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பிழையாக நடந்துகொண்டமைக்கான ஆதாரங்கள் எதுவும், சுல்கர்னைன் ஹைதரிடம் இல்லையெனத் தெரிவித்திருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, எனவே ஹைதர் சுமத்திய குற்றச்சாட்டுக்களை மீளப்பெற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் விளையாடிக்கொண்டிருந்த ஹைதர், நவம்பர் 8 ஆம் திகதி ஹோட்டல் அறையிலிருந்து திடீரெனக் காணாமல் போனார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேநேரம் போட்டியில் விளையாடாமல் லண்டன் சென்றமையே தான் செய்த தவறு எனக் குறிப்பிட்டிருக்கும் சுல்கர்னைன் ஹைதர், ஆயினும் அந்த நேரம் அங்கிருந்து வெளியேறுவதைத் தவிர வேறு எதுவும் தனக்கு சரியாகப் படவில்லையென்றும் கூறியுள்ளார்.

# சங்கக்கார, சமரவீர சிறப்பாட்டம் மூன்றாவது டெஸ்ட் சமநிலையில்

## தொடரை வென்றது இங்கிலாந்து

(லண்டன்)

சங்கக்கார மற்றும் சமரவீர ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்த்துக் கொண்டது. இருப்பினும் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றிக் கொண்டது.

இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 16 ஆம் திகதி சௌதம்ப்டன் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக களமிறங்கிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது. இதில் பிரசன்ன ஜெயவர்த்தன 43, சமரவீர 31, பெர்னாண்டோ 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிறிட் ட்ரெம்லெட் ஆறு விக்கெட்டுக்களையும், அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி, எட்டு விக்கெட்டுக்களை இழந்து 377 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் இயன் பெல் ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கெவின் பீற்றர்சன் 85, இயன் மோர்கன் 71, குக் 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லக்மெல் மூன்று, வெலகெதர, பெரேரா தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

193 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சிற்காக ஆடிய இலங்கை அணி, நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 334 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சங்கக்கார 119 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் சங்கக்கார பெற்ற 25ஆவது சதம் இதுவாகும். மற்றும் சமரவீர ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ரங்கண ஹேரத் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் மூன்றாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது.

எனினும், மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, மூன்றாவது போட்டி மழை காரணமாக பெரும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்குமிடையிலான ஒரு போட்டியைக் கொண்ட ரி-20 போட்டி வரும் 25ஆம் திகதியும், ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் முதல் போட்டி வரும் 28ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதலாவது ஒரு நாள் போட்டியில் சனத் ஜெயசூரிய விளையாடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தேர்தல் திணைக்களத்தில் சர்வகட்சி செயலகம்

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள 64 உள்ளூராட்சி சபைகளின் தேர்தலுக்காக, தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களத்தில் இம்மாதம் 27 ஆம் திகதியிலிருந்து சர்வகட்சி செயலகமொன்று இயங்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட 64 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் ஜூலை 23 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது..

இதற்குமுன் தேர்தல் தினத்தில் மாத்திரமே இத்தகைய சர்வகட்சி செயலகம் இயங்கியது. எனினும் இம்முறை ஜூன் 27 ஆம் திகதியிலிருந்து தேர்தலின் பின்னர் இருவாரகாலம் வரையும் இச்செயலகம் இயங்கவுள்ளது.

இதன்மூலம் தேர்தல் தினத்தில் மாத்திரமல்லாமல் தேர்தல் பிரசாரக் காலத்திலும் தேர்தலின் பின்னரும் தேர்தல் வன்முறைகளை கட்சிகளின் அதிகாரிகள் கண்காணிக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.


தேர்தல்கள் ஆணையாளராக மஹிந்த தேசப்பிரிய பதவியேற்ற பின்னர் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காக் கொண்டு, பிரதான அரசியற்கட்சிகள் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கிராம மட்டத்தில் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.



இம்முறை தேர்தல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றின் அதிகாரத்தை கூட்டமைப்பு கைப்பற்றும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கட்சியின் கூட்டங்கள் மற்றும் தெளிவூட்டல் நடவடிக்கைகளை, இறுதி 10 நாட்களுக்குள் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக பொதுச் செயலாளர் மேலும் கூறினார்.


இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என அக்கட்சியின் பிரசார செயலாளர் விஜித்த ஹேரத் குறிப்பிடுகின்றார்.

# ஜனாதிபதி, அரசுக்கெதிரான சர்வதேச வழக்கு ராஜதந்திர உறவில் பாதிப்பினை ஏற்படுத்தும்

## —— எச்சரிக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ——

(கொழும்பு)

**வெளிநாடுகளில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கெதிராக தொடுக்கப்படும் வழக்குகள் எதிர்காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளில் பாதிப்பேற்படுத்தக்கூடும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



வெளிநாடுகளில் இருக்கும் நீதி மன்றங்களில் எவரும் அரசாங்கத்துக்கு எதிராகவோ, ஜனாதிபதிக்கு எதிராகவோ வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சப்ரகமுவ மாகாண விகாரையொன்றில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இவ்வாறான வழக்குகள் தொடுக்கப்படுவதற்கு அரசாங்கத்தின் ஒரு சில செயற்பாடுகளே காரணமாக அமைந்திருக்கின்றன. பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டிய அரசாங்கம், அதனைப் பூதாகரமாக வளரவிடுவதன் காரணமாகவே இன்றைய நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

எந்தவொரு பிரச்சினையையும் எதிர்கொள்வதற்கான சாணக்கியம் அரசாங்கத்துக்கு இல்லை. அவ்வாறு இருந்திருக்குமானால் இன்று அரசாங்கத்துக்கு எதிராக நிற்கும் சர்வதேச சமூகம் இலங்கையுடன் கைகோர்த்து எமது எதிரிகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும்.

ஆனால் இன்று வெளிநாடுகளில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக வெளிநாடுகளில் வழக்குகள் தான் தொடுக்கப்படுகின்றன. அவற்றின் காரணமாக நம் நாட்டின் மக்களும், எமது வெளிநாட்டுத் தொடர்புக்கான ராஜதந்திர சேவைகளுமே பாதிக்கப்படப் போகின்றன என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்

# இலங்கையை அடிப்படையாக வைத்து அரசியல் நடத்துகின்றது பிரிட்டன்

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையை அடிப்படையாக கொண்டு பிரித்தானியா அரசியலில் ஈடுபடுவதாக அரசாங்கம் குற்றம்சுமத்தியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் பிரித்தானியா சமகாலத்தில் செயற்படுகின்ற விதம் மற்றும் கடந்த காலங்களில் செயற்பட்ட விதம் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் சனல் -4 தொலைக் காட்சி காணொளிகள் வெளியிடப்பட்ட பின்னர், அந்த நாட்டு அரசாங்கம் செயற்பட்ட விதம் ஒரு உதாரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சனல்-4 தொலைக்காட்சி காணொளிகள் வெளியிடப்பட்ட பின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க சர்வதேச சமூகம் ஆர்வம் செலுத்த வேணடும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

அந்தக் காணொளிகள் தொடர்பில் இந்த வருட இறுதிக்குள் இலங்கை அரசாங்கம் நியாயமான நடவடிக்கையொன்றை மேற்கொள்ளாத பட்சத்தில், மாற்று பிரதிகூலங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என பிரித்தானியா அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பிரித்தானியாவின் தெற்காசிய பிராந்திய வெளியுறவு அமைச்சர் அலிஸ்டெயார் பர்ன் அறிவிப்பு விடுத்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இணையவழி நுழை விசைவுத் திட்டம் செப்ரம்பரில் நடைமுறைக்கு

(கொழும்பு)

ஐரோப்பாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் குளிர்காலம் ஆரம்பிக்க முன்னர், இணையவழி நுழைவிசைவு வழங்கும் முறையை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தகவல் வெளியிடுகையில், இணையவழி நுழைவிசைவு வழங்குவதற்கான திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கான 70 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது தொழில்நுட்ப சீராக்கல் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அடுத்தவாரம், சுற்றுலாத்துறை, பயணமுகவர்கள், வர்த்தகத்துறையினர், விடுதித்துறையினர் மற்றும் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குள் நுழைவதற்கான நுழைவிசைவுக் கட்டணத தொகை தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் கட்டணம் சமமானதாகவே இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமான நுழைவிசைவு வழங்கும் நாடுகளின் குடிமக்களுக்கு மட்டுமே இலவசமாக நுழைவிசைவு வழங்கப்படும்.

இணையவழி நுழைவிசைவு வழங்கும் பணியகம் கொழும்பில் 24 மணி நேரமும் செயற்படும்.

இந்தப் பணியகத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் , பாதுகாப்பு அமைச்சு, மற்றும் ஏனைய தொடர்புடைய நிர்வாகக் கட்டமைப்புகளின் அதிகாரிகள் தொடர்ச்சியாகப் பணியாற்றுவர் என்றும் சூலானந்த பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# இடமாற்றம் செய்யப்படுகிறது செங்கன் விஸா அலுவலகம்

(கொழும்பு)

நோர்வே, பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் இலங்கை தூதரகங்களுக்கான செங்கன் விஸா விண்ணப்ப நிலையம் நேற்று திங்கட்கிழமை முதல் கொழும்பு - 01 இல் உள்ள உலக வர்த்தக மைய கட்டட கிழக்கு கோபுரத்தின் 6ஆவது மாடியில் இயங்கவுள்ளது.

வி.எப்.எஸ். குளோபல் சேவை நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் இந் நிலையம், தூதுவராலயங்களின் விஸா விண்ணப்ப நடைமுறைகள் தொடர்பான விடயங்களை கையாளுகின்றது.

2001ஆம் ஆண்டு முதல் 425 அலுவலகங்களினூடாக 35 நாடுகளின் தூதரகங்களுக்கு சேவையாற்றி வருகின்ற இந்நிறுவனம், 52 நாடுகளில் இயங்கின்றது.

செங்கன் விஸா விண்ணப்ப நிலையம் முன்னர் கொழும்பு - 5 ஹவெலேக் வீதியில் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

# சனல் - 4 காணொளி தொடர்பாக இராணுவம் தனியாக விசாரணை

(கொழும்பு)

சனல் - 4 வீடியோ நாடா தொடர்பாக இராணுவம் தனியாக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

சனல் - 4 வீடியோ நாடா தமக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக அனுப்பிவைக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது கிடைக்கப்பெற்றதும் இந்த விசாரணைகளை எப்படி முன்னெடுப்பது என்பது குறித்து இராணுவம் பின்னர் தீர்மானிக்கும் எனவும். இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சனல் - 4 வீடியோ நாடா தொடர்பாக கற்று கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு



ஆய்வுக்கு உட்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# பரந்தமனப்பான்மை, உறுதியான மனநிலையை விளையாட்டுத்துறையே ஏற்படுத்துகின்றது

## அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்



(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை ஒரு மனிதனுக்கு உறுதியான மனநிலையை உருவாக்குகின்றது. அதுமட்டுமன்றி, பரந்த மனப்பாங்கையும் வளர்க்கின்றது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்தகால குழப்ப நிலைகளால் பலா குழப்பமடைந்திருப்பார்கள். அவர்களுடைய மனதை ஒருநிலைப்படுத்தி அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பற்றை ஏற்படுத்தி அவர்களாலும் சாதிக்க முடியும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்த வேண்டியது விளையாட்டுக்கள் சார்ந்தவர்களின் கைகளில் உள்ளது.

இளைஞர்களை மிகவும் ஆர்வத்துடனும் ஆக்கத்துடனும் வளர்த்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு உள்ளது.

நான் மாவட்டத்தின் பல பிரதேச செயலக விளையாட்டு விழாக்களுக்குச் சென்று பார்த்துள்ளேன். விளையாட்டு வீரர்கள் மிக ஒழுக்கத்துடன், விட்டுக்கொடுப்புடன் செயற்படுகிறார்கள். இதனைப் பாராட்ட வேண்டும். அவர்களை அப்படியான நிலைக்கு வளர்த்தெடுத்தவர்கள் எமது பிரதேச செயலர்களும், விளையாட்டு உத்தியோகத்தர்களுமே ஆவர்.

எமது வீரர்கள் திறமையானவர்கள். தேசிய ரீதியில் சர்வதேச ரீதியில் அவர்கள் பிரகாசிக்க வேண்டும். பிரதேச செயலகங்களில் நடைபெற்ற போட்டிகளுக்கு வருகை தந்தவர்களைவிடக் குறைவானவர்களே இன்று மாவட்ட போட்டிக்கு வருகை தந்துள்ளனர். இந்த நிலை மாற்றமடைய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# வரியிறுப்பாளர் சங்கம் புனரமைப்பு

(வவுனியா)


வவுனியா நகர சபை வரியிறுப்பாளர் சங்கம் புனரமைக்கப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு சிறந்த முறையில் செயற்பட்ட போதிலும், பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக செயற்பட முடியாது போனது.

நேற்றுமுன்தினம் முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சங்கம் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். வவுனியா நகரசபைக்கு உடனடியாகத் தலைவர் நியமிக்கப்பட்டு சபைச் செயற்பாடுகள் நடைபெற வேண்டும் என புதிய வரியிறுப்பாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நகர சபையின் செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் கட்டமைப்பாக இந்தச் சங்கம் செயற்படும் எனவும் இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், நகர சபை செயலாளர், அரச உயர்மட்ட அதிகாரிகளையும் இந்தச் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

# அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளையின் குருத்துவ வெள்ளிவிழா நன்றித் திருப்பலி



(யாழ்ப்பாணம்)

சில்லாலை - புனித கதிரைமாதா ஆலயத்தைச் சேர்ந்தவரும், பிஷப் சவுந்தரம் மீடியா நிலைய இயக்குனரும், யாழ். பல்கலைக்கழக ஊடக வழங்கல் பயிற்சி நிலைய விரிவுரையாளருமான அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழா நன்றித் திருப்பலி சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானபிரகாசம், நற்கருணை நாதர் சபையின் குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் 1986 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு யாழ்.மரியன்னை பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாகவும் மண்டைதீவு, கரம்பன், அரியாலை, சுண்டுக்குளி ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகவும், கத்தோலிக்க அச்சகத்தின் அதிபராகவும், பாதுகாவலன் ஆசிரியராகவும், சமூகத் தொடர்பு ஆணைக் குழுவின் இயக்குநராகவும் இருந்துள்ளார். அத்துடன், யாழ்.பல்கலைக்கழக ஊடக வழங்கல் பயிற்சி நிலைய இணைப்பாளர் மற்றும் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

# புலிகளின் நிதிசேகரிப்பை முடக்க வருகிறது புதிய சட்டத் திருத்தம்

(கொழும்பு)

புலிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களை முடக்குதல், நிதிசேகரிப்பு நடவடிககைகளை தடுப்பதற்கான முயற்சியாக நிதிப் பரிமாற்றச் சட்டம், பணச்சலவைச் சட்டம், பயங்கரவாத நிதியளிப்பு தடைச் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்களை செய வதற்கு அரசாங்கம் தீரமானித்துள்ளது.

இந்த உத்தேச சட்டத் திருத்தங்கள் சட்டமா அதிபரின் அங்கீகாரத்திற்கு காத்திருப்பதாக தன்னை இனங்காட்ட விரும்பாத மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத தவுடன் அவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர்கூறினார்.

பல வருடங்களுக்கு முன்னர் இச்சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது. சூழ்நிலை வித்தியாசமாக இருந்தது. இப்போது சந்தேகத்திற்கிடமான, குறிப்பாக பயங்கரவாத குழுக்களினால் மேற்கொளளப்படும் பரிமாற்றங்கள் தொடர்பாக நாம் இன்னும் அதிக விடயங்களை செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் இச்சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். இதற்காக மத்தியவங்கி தேவையானவற்றைச் செய்துள்ளது. நாம் சட்டமா அதிபரின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறோம் என அவர் கூறினார்.

# ஹெலிகளை வழங்க இலங்கை முன்வந்தமை எந்த விபரமும் தெரியாது என்கின்றது ஐ.நா.

(கொழும்பு)

ஹெலிகொப்டர்களை இலங்கை வழங்க முன்வந்திருப்பது தொடர்பாக தங்களுக்கு எந்த விபரமும் கிடைக்கவில்லையென ஐ.நா.தெரிவித்துள்ளது.

உக்ரேனில் தயாரிக்கப்பட்ட எம்.ஐ.24 ஹெலிகொப்டர் மற்றும் சீனத் தயாரிப்பான வை12 விமானங்களை நாங்கள் வழங்க முன்வந்திருக்கிறோம் என்று விமானப்படை பேச்சாளர் அன்டி விஜயசூரிய தெரிவித்தாக மேற்கோள் காட்டப்பட்டிருந்த நிலையில், அவற்றை வழங்குவது தொடர்பான தங்களுக்கு எந்த விபரமும் கிடைக்கவில்லையென ஐ.நா. தெரிவித்திருப்பதாக நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கை வழங்க முன்வந்தமை தொடர பான ஐ.நா.வின் மீளாய்வானது போர்க் குற்றங்கள் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என பான் கீ மூனின் பேச்சாளர் மாட்டின் நிசேர்க்கியிடம் இன்னர் சிற்றி பிரஸ் கேட்டது. நான்கு மணித்தியாலயங்கள் கடந்த பின்னர் நீசேர்க்கியின் அலுவலகம் இந்தப் பதிலை இன்னர் சிற்றி பிரஸுக்கு அனுப்பியிருந்தது. ஹெலிகள் பி.பி.கே.ஓ.ஓ.வின் படை பிறப்பாக்கிச் சேவை என்பன தொடர்பான இலங்கையிடமிருந்து வழங்க முன்வந்தமை தொடர்பாக இதுவரை விபரம் எதனையும் நாங்கள் பெற்றிருக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 இல் கடற்கரை குருதிப்பெருக்கு என்று ஐ.நா.வின் பிரதி உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹொம்ஸ் குறிப்பிட்டிருந்த விடயத்தில், விமானப்படை சம்பந்தப்பட்டிருந்தது. மிக அண்மையில் பிரிட்டனின் சனல் - 4 இல் கொலைக்களங்கள் ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆவணப்படமானது ஜூன் 21 இல் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.வின் உட்புறத்தே திரையிடப்படவுள்ளது. ஐ.நா. செயலாளர் நாயகமாக பான் கீ மூன் இரண்டாவது ஐந்தாண்டு பதவிக்காலம் தொடர்பாக பொதுச் சபையில் வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு முன்பாக இது திரையிடப்படவுள்ளது. (ஜூன் 15 இல் அதனை பான் கீ மூன் பார்த்திருக்கவில்லை. அதனை அவர் பார்த்திருக்கவில்லையென நசேர்க்கி இன்னர் சிற்றி பிரஸுக்குக் கூறியிருந்தார்) ஆனால், இப்போது ஐ.நா.வுக்கு வெளிப்புறத்தே திரையிடல் நகர்ந்துள்ளது. வீதிக்கு அப்பால் உள்ள தேவாலய நிலையத்தில் திரையிடப்படவுள்ளது.

ஐ.நா.வுக்கு உள்ளே திரையிடப்பட்டால் தான் சமுகமளிக்கவிருந்ததாக இலங்கைத் தூதுவர் பாலித கோஹண இன்னர் சிற்றிபிரஸுக்குக் கூறியுள்ளார். ஆதலால் வீதிக்கு அப்பால் திரையிடப்படும் போது அவர் சமுகமளிக்கமாட்டார். நீதி விசாரணைக்கு புறம்பான தண்டனை காட்சிகள் பற்றி அவர் கூறுகையில், யார் சிங்களவர், யார் தமிழர் என ஒருவரால் நிரூபிக்கமுடியாது என்று அவர் தெரிவித்தார். நிச்சயமாக இது சிறப்பான தடத்தில் என்று இன்னர் சிற்றி பிரஸ் குறிப்பிட்டுள்ளது.

# சட்டவிரோத மின்பாவனை; தண்டப்பணம் 18 மில்லியன்

(கொழும்பு)

கடந்த மாதம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல்களின் மூலம் அறவிடப்பட்ட தண்டப்பணம் மூலம் மின்சக்தி மற்றும மின்வலு அமைச்சுக்கு சுமார் 18 மில்லியன் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின் அலகுகளைக் கணக்கிடும் மீற்றரில் மாற்றங்கள் ஏற்படுத்தியும், சட்டவிரோதமான நெறியாழ்கைகளைப் பின்பற்றியும் மின் பெற்ற 237 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து, மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 152 சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் அறவிடப்பட்ட தண்டப்பணம் ரூபா 17,752,094.09 என்றும், அதில் நீதிமன்றக் கொடுப்பனவுகள் 2,464,681.00 என்றும், அவை நீங்க மொத்தமாக 15,287,412.00 ரூபா நட்டப்பணம் கிடைக்கப்பெற்றதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு இவ்வாறு சட்டவிரோத மின் பெறுபவர்கள் குறித்து 1987 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தருமாறும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# அதிகாரிகளால் ஏமாற்றப்படும் விவசாயத்துறை அமைச்சர்

(கொழும்பு)

ஆர்செனிக் நச்சுப்பொருள் கலந்துள்ளதாகக் கூறப்படும் பீடை நாசினிகள் குறித்த விசாரணை தொடர்பாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை அதிகாரிகள் சிலர் ஏமாற்றி வருவதாக அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் அக்கட்சியின் அரசியல் குழு அங்கத்தவரான பியசிறி விஜேநாயக்க இது தொடர்பாகத் தெரிவிக்கையில்-


சர்வதேச கம்பனிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் விவசாயத்துறை சார்ந்த சில அதிகாரிகளால் விவசாயத்துறை அமைச்சர் ஏமாற்றப்படுவதாக் கூறினார்.

இப்பீடை நாசினிகளில் ஆர்செனிக் கலந்துள்ளதாக சுங்கத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இது தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் விஜேய நாயகக கூறினார்.

சுமார் ஆயிரம் பீடை நாசினிகள் இறக்குமதி செய்யப்பட்டாலும் 28 படை நாசினிகள் மீதே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# அரசாங்கத்துடனான இயல்பான உறவினை ஏற்படுத்தும் சம்பந்தனின் முயற்சியை எதிர்க்கும் கூட்டமைப்பு எம்.பிக்கள்

## பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இயல்பான உறவை ஏற்படுத்தும் இரா.சம்பந்தனின் முயற்சிகளைக் கெடுக்கும் நாசவேலைகளில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

வடக்கு,கிழக்கில் இயல்பான அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவுமாறு இரா.சம்பந்தன் அனுப்பிய கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது.

இந்தக் கடிதத்தில் இராணுவம் மற்றும் பாதுகாப்புச் செயலருடன் இணைந்து பணியாற்ற இரா.சம்பந்தன் இணக்கம் தெரிவித்துள்ளார். அவரது கருத்தை அரசாங்கம் மதிக்கிறது.

இந்தியா ஹவுசில் கடந்த 8ஆம் நாள் இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா முன்னிலையில் இரா.சம்பந்தனை சந்தித்துப் பேசியுள்ளேன். இந்தியத் தூதுவரின் அழைப்பின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த வியாழக்கிழமை அளவெட்டியில் நடந்த சம்பவத்தை அடுத்து இரா. சம்பந்தனுடனான சந்திப்புத் தொடர்பாக தகவலை வெளிப்படுத்துவதைவிட, எனகு வேறு தெரிவுகள் ஏதும் இல்லை.

ஆனால் இரா.சம்பந்தனின் இந்த நகர்வுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினருக்குப் பிடிக்கவில்லை.

எனக்குக் கடிதம் எழுதிய பின்னர் இரா.சம்பந்தன் இந்தியாவுக்கு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்று விட்டார். நான் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தயாராக இருந்தேன்.

துரதிஷ்டவசமாக அந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே இரா.சம்பந்தனின் முயற்சிகளைப் பிடிக்காத கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அனுமதி பெறப்படாத கூடடம் ஒன்றை அளவெட்டியில் நடத்தினர்.

அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய கூட்டத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியானவுடன் அதுபற்றி தனிப்பட்ட ரீதியாக விசாரித்தேன்.

அதிகாரி ஒருவரின் தலைமையில் படையினர் குழுவொன்று சமூக மண்டபத்துக்குச் சென்றபோது அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அங்கே படையினருக்கும் கூட்டத்தில் பங்கேற்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட சிலருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதத்தின் போது அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கே அடி விழுந்தது. ஆனால் படையினர் நாடாளுமன்ற உறுப்பினரையோ கூட்டத்தில் பங்கேற்றவர்களையோ தாக்கவில்லை. வாகனங்கள் சேதமாக்கப்பபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளும் பொய்யானவை.

ஊடகங்கள் அளவெட்டிச் சம்பவத்தை மிகைப்படுத்தியுள்ளன. இந்தச் சம்பவத்தை அனைத்துலக மட்டத்துக்கு கூட்டமைப்பு கொண்டு சென்றுள்ளது.

வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை அழைத்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அளவெட்டிச் சம்பவம் தொடர்பாக விசாரித்துள்ளது. கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரும் வெளிவிவகார செயலர் கருணாதிலக அமுனுகமவிடம் இதுபற்றி விசாரித்துள்ளனர்.

வெளிநாட்டு அரசாங்கங்கள் தகவல்களை ஆராயாமல் விவகாரங்களைப் பிரச்சினையாக எழுப்புகின்றன.

அண்மையில் ஜேர்மனி தூதுவரும் கட்டுநாயக்க சம்பவத்தை அடுத்து இப்படித் தான் என்னை மிரட்டியிருந்தார். புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின்னரும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மை மாற்றிக் கொள்ளவில்லை.

போர்நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய பொங்குதமிழ் நிகழ்வு வடக்கு, கிழக்கில் படைமுகாம்கள், பொலிஸ் நிலையங்களுக்கு முன்னால் வன்முறைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படக் காரணமாகியதென்பதை மறக்க முடியாது. அரசுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அனைத்துலக சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனை கூற வேண்டும்.

அவர்கள் எதைத்தான் செய்தாலும், வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அவரது போரிடும் படையினரையும் சாவில் இருந்து உயிர்த்தெழ வைக்க முடியாது என்றும் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார்.

# சட்டவிரோத கசிப்பு வைத்திருந்தவர்கள் அபராதத் தொகையைச் செலுத்தினர்

(கிளிநொச்சி)

விசுவமடு பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பை வைத்திருந்த மூன்று பேருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி.சிவகுமார் அபராதத்தொகை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

விசுவமடு நகருக்கு அண்மையான பகுதியில் சட்டவிரோதமாக ஒரு இலட்சத்து 62 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பை பரலில வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நபரொருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி.சிவகுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இதேவேளை, 41 போத்தல்கள் கசிப்பு வைத்திருந்ததான குற்றச்சாட்டில் மற்றுமொரு நபருக்கு ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபாய் அபராதம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.


15 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்ததான குற்றச்சாட்டில் இன்னுமொரு நபருக்கு 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

மேற்படி நபர்கள் தண்டப் பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டி நேரிடுமெனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த நிலையில், பொலிஸாரும் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பிரதேச சபையின் நிதியில் கட்டப்பட்ட சோலையான் சனசமூக நிலையம் திறப்பு

(காரைநகர்)



காரைநகர் பிரதேச சபையின் நிதியுதவியுடன் காரைநகர் வேதரடைப்புப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சோலையான் சனசமூக நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சனசமூக நிலையத் தலைவர் சங்கரன் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வில் ஈபிடிபியின் காரைநகர் அமைப்பாளர் ரஜினி பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு சனசமூக நிலையக் கட்டடத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைப்பாளர் ரஜனி- திறந்து வைக்கப்பட்டுள்ள சனசமூக நிலையத்தை நன்கு பராமரித்து பத்திரிகைகள், அறிவுள்ள நூல்களைச் சேகரித்து மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

சனசமூக நிலையத்திற்குத் தேவையான தளபாடங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும், சிவன் கோயில் வீதியைத் திருத்துவதற்கும் உரிய முயற்சிகள் எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச சபை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (50)

# கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் பொதுச்சந்தை திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆனைவிழுந்தான் பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை புதிதாக பொதுச்சந்தையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக சந்தையொன்று அமைக்கப்பட வேண்டுமென்பதற்கிணங்க இந்தச் சந்தையை கரைச்சிப் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் கெயர் நிறுவனம் அமைத்துக்கொடுத்துள்ளது.

ஆனைவிழுந்தான் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சபாநாயகம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் சந்தையைத் திறந்து வைத்தார். பெயர்ப்பலகையை கெயர் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் மைத்திரி திரைநீக்கம் செய்து வைத்தார்.

# பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முடியாத மக்கள் பிரதிநிதிகளால் பயன் இல்லை

(கொழும்பு)

பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கமுடியாத மக்கள் பிரதிநிதிகளால் எவ்வித பயனும் இல்லையென பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேனம் குறிப்பிடுகின்றது.

அவ்வாறான மக்கள் பிரதிநிதிகள், பொருத்தமான நபர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி வெளியேறுவதே சிறந்ததென சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீன் மெண்டிஸ் தெரிவிக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் உயர்கல்வி பிரதியமைச்சர் நந்தமித்ர ஏக்கநாயக்கவிடம் நியூஸ்பெஸ்ட் வினவியது.

பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்குவதற்கு, அது மாற்றுவழியாக அமையாதென உயர்கல்வி பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.







பூநகரி மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற 'வணிகச்சரம்' வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராசா முதற்பிரதியை கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.சிவகுமாரிடம் வழங்குவதையும், சிறப்பு பிரதியை பழைய மாணவர் சங்கப் பொருளாளர் கே.றஜிக்குமார் பெறுவதையும், கலந்துகொண்ட அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களையும் காணலாம். (112)


## ஒன்றாகத் தூங்கும் மனிதனும் சிங்கமும்

சிங்கமும், மனிதனும் ஒன்றாகப் படுத்துத்தூங்கு கின்றமையை நீங்கள் கண்டு இருக்கின்றீர்களா? நாங்கள் காட்டுகின்ற மனிதன், சிங்கம் ஆகிய இருவரும் நல்ல நண்பர்கள். நண்பனுக்கு மேல் உடலை சாய்த்துக் கொண்டு தூங்குகின்றமையில் இன்பம் காண்கின்றது இச்சிங்கம். அமெரிக்காவின் கேன்சஸ் மாநிலத்தில் உள்ள மிருகக்காட்சிச்சாலை ஒன்றில்தான் இந்த அதிசயம் நிகழ்கின்றது. இது ஒரு பெண் சிங்கம். பெயர் சான்ரா. சான்ராவின் நண பனின் பெயர்



ஸ்ரிவ் க்ளெ
ய்ன். ஸ்ரிவ்
களெய்ன் இம
மிருகக் காட்
சிச்சாலையில்
வேலை பார்க்
கின்றார். சான்
ராவின் நலன்
களைப் பேணி வருகின்
றார்.


## கரண்டி திருடியவர்



உலகில் எத்தனையோ விதமான திருட்டுச் சம்பவங்களை நீங்கள் படித்திருப்பீர்கள். அந்த வகையில் இந்த திருட்டுச் சம்பவம் முற்றிலும் வினோதமான திருட்டுச் சம்பவம் என்பதை செய்தியைப் படிக்கும் அத்தனை பேரும் நிச்சயம் உணர் வீர்கள். குறித்த ஒரு நபர் தான் பயணம் செய்த 447 விமானப் பயணங்களின் போது1760 கரண்டிகளைத் திருட்டுத்தனமாக எடுத்து சென்று தனது வீட்டில் சேகரித்து வைத்துள்ளார். என்ன வியப்பாக உள்ளதா? ஆம் இது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில்,

இது என்னுடைய 1 3 ஆவது வயதில் ஆரம்பித்தது. ஒரு முறை எனது விடு முறையைக் கழிப்பதற்காக சகோதரியுடன் பெயின் நாட்டுக்கு விமானத்தில் புறப்பட்ட போது முதல் முதலாகக் கரண்டியை எடுத்து வந்தேன். பின்னர் விடுமுறை கழித்து விட்டு மீண்டும் திரும்புகையில் ஒரு கரண்டியை எடுத்தேன். அதனை எனது சமையலறையில் பயன் படுத்தும் போது எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இதனால் தொடர்ந்து இவ்வாறு 1760 கரண்டிகளைச் சேகரித்

## தற்கொலை செய்யும் எலிகள்



ஆர்டிக்பகுதி நாடுகளில் குறிப்பாக நோர்வே நாட்டில் காணப்படும் லேம மிங்க்ஸ் (Lemmings) எனப்படும் எலிகளின் இனப்பெருக்கம் நான்கு வருடங் களுக்கு ஒருமுறை மிக அதிகமாகப் பெருகிவிடும். உடனடியாக அக்கூட்டத்தில் உள்ள சற்று வயதான எலிகள் சேர்ந்து ஒரு முடிவு எடுக்கும் அதாவது கூட்டமாக தற்கொலை (Mass Suicide) செய்து கொள்வதென. அதற்கான நாட்கள் நெருங்கியவுடன் அவையனைத்தும் ஒருஇடத்தில் கூடும் பின்னர் அவை கடல் இருக்கும் திசையை நோக்கி பயணத்தை ஆரம் பிக்கும். அவை செல்லும் வழி யில் வரும் தடங்கல்களை பற்றி கவலைப் படாமல் பல



நூறு மைல்கள் கூட நடந்து செல்லும். இறுதியாக அவை கடற்கரையில் வந்து சேர்ந்ததும் கடலில் குதித்து தற்கொலை செய்து கொள்ளும். சில ஆராய்ச்சியாளர்கள் இவை தற்கொலை செய்துகொள்வதில்லை. இவை இனப்பெருக்கத்தின் காரணமாக அதிகமாக பெருகிவிட்டதால் புதிய இடத்தை தேடிச்செல்வதாக கூறுகிறார்கள்.

## மிகப்பெரிய சிலந்தி வலை

உலகிலேயே மிகப் பெரிய சிலந்தி வலையை விஞ்ஞானிகள் கண்டுபிடித் துள்ளனர். அமெரிக்காவில் மடகஸ்கரில் உள்ள ஆற்றின் மீது ஒரு சிலந்தி வலை பின்னியுள்ளது. இந்த வலை 25 மீற்றர் (82 அடி) அகலம் கொண்டது. 2 பஸ்களின் அளவுடையது. மிகவும் பலம் வாய்ந்ததாக இது உள்ளது. 'டார் வின்ஸ் பார்க்' இன சிலந்தியால் இந்த வலை பின்னப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த இன சிலந்திகள் 'ஸ்பைடர் மேன்' போன்று பெரிய அளவில் பலம் வாய்ந்த தாக இருக்கும். அவை சிறிய ரக பூச்சிக ளைத் தான் உண வாக பயன்படுத்து கிறது. பலம் வாய்நத வலைகளை



பெண் சிலந் திகள் தான் பின்னு கின்றன என்றும் விஞ்ஞானிகள் கருது கின்றனர்.

## தும்பிக்கையுடன் பன்றிக்குட்டி



ஒரு பன்றிக் குட்டி யானை முகத் துடனும், தும்பிக்கையு டனும் பிறந்துள்ளது. இந்த அதிசயப்பன்றிக்குட்டி சீனாவில் பிறந்துள்ளது. இந்தப் பன்றிக்குட்டியைப் பார்க்க இப்போது மக்கள் படையெடுத்து வருகின்றனர். இதன் உடல்வாகு வழமையான பன்றிகள் போல்தான் உள்ளது. ஆனால் காதுகள் மிகவும் பெரிதாக உள்ளன. தும்பிக்கைதான் பெரிய அதிசயம். மொத்தத்தில் இந்தப் பன்றிக்குட்டி கிட்டத்தட்ட ஒரு யானைக்குட்டி போல் காட்சிய ளிக்கின்றது.

## கின்னஸில் இடம்பிடித்த பல்ப்

அமெரிக்காவில் கடந்த 110 ஆண்டுகளாக பீஸ் போகாமல் எரிந்து வரும் குண்டு பல்ப், கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் லிவர்மோர் நகரில் தீயணைப்பு அலுவலகம் உள்ளது.

இங்கு 1901 ஆம் ஆண்டு 60 வாட் குண்டு பல்ப் பொருத்தப்பட்டது. அதற்கு பிறகு, கட்டடப் பராமரிப்பு வேலைகள், பெயின்ட் அடிக்கும் வேலைகள் பல முறை நடந்த போதும், இந்த பல்ப் அகற்றப்படவில்லை. தற்போதும் எரிந்து வருகிறது. 110 ஆண்டுகளாக பீஸ் போகாமல் எரிவதால் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.




1903 ஆம் ஆண்டில் சில கால மும 1937 இல் ஒரு வார மும் தொடர் ந்து 1976 ஆம் ஆண்டு வரை யில் அவ் வப் போது மின்தடை ஏற் பட்ட நேரங்களில் மட் டும் இந்த பல்ப் எரியவில்லை. மற்றபடி 110 ஆண் டுகளாக தொடர்ந்து எரிந்து வருகிறது.

நூற்றாண்டு கடந்த மின் விளக்குகளை பாதுகாக்கும் கமிட்டி ஒன்று லிவர்மோர் நகரில் செயல்படுகிறது. அதன் தலைவர் லின் ஓவன்ஸ் கூறுகையில், குண்டு பல்பில் உள்ள டங்ஸ்டன் இழை, அதிக வெப்பம் தாங்க முடியாமல் சிறிது காலத்தில் வலுவிழந்து உடைந்துவிடும். இதைத்தான் பீஸ் போகிறது என்கிறோம். இந்த பல்ப் இத்தனை காலம் எப்படி பீஸ் போகாமல் எரிகிறது என்பது விஞ்ஞானிக ளுக்கே புரியாத புதிராக உள்ளது என்றார்.

## வீடியோமெயில் அனுப்புதல்


எந்த ஒரு மென்பொருளையும் நம் கணினியில் நிறுவாமல் இலவசமாக ஒன்லைன் மூலம் வீடியோ மெயில் அனுப்பலாம். ஒன்லைன் மூலம் இலவசமாக வீடியோ மெயில் அனுப்ப நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது. இந்தத்தளத்திற்கு சென்று நாம் தளத்தின் முகப்பில் இருக்கும் Join now என்ற பொத்தானை சொடுக்கி புதிதாக ஒரு பயனாளர் கணக்கு உருவாக்கி கொள்ளவும். நம் பயனாளர் முகவரியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு எந்த மென்பொருளும் இல்லாமல் நம் உலாவி மூலம் வீடியோ இமெயில் அனுப்பலாம். ஒன்லைனில் வீடியோ சாட் செய்ய விரும்பும் நபர்க ளுக்கும் இந்தத் தளம் பய னுள்ளதாக இருக்கும். Download and save வீடியோ என்பதை சொடுக்கி வீடியோவை நம் கணினியில் சேமிக்கலாம்.

பிரபலமாக உள்ள அனைத்து மொபைல் போன்களிலும் நாம் இந்த வீடியோவைப் பார்க்கலாம். பெரிய நிறுவனங்கள் ஒன்லைன் மூலம் தற்போது வீடியோ சாட் பயன்படுத்தி நேர்காணலை நடத்துகின்றனர். வெளிநாட்டில் இருப்பவர்கள் எந்த மென்பொருளும் இல்லாமல் வீடியோ சாட் செய்யும் இந்த முறையை தற்போது பயன்படுத்துகின்றனர்.

இணையமுகவரி:-


http://www.eyejot.com/

கணினி முலை



### இறுதிச் சந்தர்ப்பமும் கைநழுவியது

# கனிமொழியின் பிணை மனுவை நிராகரித்தது உச்ச நீதிமன்றம்



(புதுடில்லி)

**தி.மு.க எம்.பி. கனிமொழியும், கலைஞர் ரீ.வி நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் தாக்கல் செய்த பிணை மனுவை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், சீ.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்ட பின்னர் அவர்கள் இரு வரும் பிணை கோரி சீ.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தை அணுகலாம் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.**

கலைஞர் ரி.விக்கு பணப் பரிமாற்றம் நடந்தது தொடரபான உண்மையான ஆவணங்கள் இன்னும் கைப்பற்றப்படவில்லை என்பதால் கனிமொழிக்கும், சரத்குமாருக்கும் பிணை வழங்கக்கூடாது என சி.பி.ஐ. எதிர்ப்பு தெரிவித்தது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ஆதாயம் பெற்றதாகக் கூறப்படும் ரி.பி.ரியாலிட்டி நிறுவனம், அதற்குப் பிரதிபலனாக தனது துணை நிறுவனங்கள் மூலம் கலைஞர் ரி.வி.க்கு ரூ. 214 கோடி வழங்கியதாக சி.பி.ஐ துணைக் குற்றப்பத்திரிகையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள கனிமொழியும், சரத்குமாரும் பிணை கோரி டில்லி சிறப்பு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

அவர்களது மனுக்களை சிறப்பு நீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து இருவரும் டில்லி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். ஆனால்,டில்லி உயர் நீதிமன்றமும் அவர்களது மனுக்களை தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து இருவரும் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

இந்த மனுக்கள் மீது விசாரணை நடைபெற்று வரும் நிலையில் அவர்களுக்கு பிணை வழங்கக்கூடாது என்று சி.பி.ஐ தரப்பில் கடந்த 17ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

கனிமொழியும், சரத்குமாரும் முக்கிய சதியாளர்கள். அவர்களை விடுவித்தால் சாட்சிகளையும், ஆதாரங்களையும் அழித்து விடுவார்கள், எனவே அவர்களுக்கு பிணை வழங்கக் கூடாது என்று சி.பி.ஐ மனுவில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் அவர்களின் பிணை மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம் அவற்றை தள்ளுபடி செய்வதாக அறிவித்தது.

## சாயிபாபா அறக்கட்டளை வாகனத்திலிருந்து பெருமளவு பணம் பொலிஸாரால் பறிமுதல்

(ஹைதராபாத்)

ஆந்திராவில் வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 35 இலட்ச ரூபாவை, பொலிஸா பறிமுதல் செய்தனர். இந்த வாகனம், சாய்பாபா மத்திய அறக்கட்டளைக்குச் சொந்தமானது என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம், அனந்தப்பூர் மாவட்ட எஸ்.பி. ஷா நவாஸ் காசிம் கூறியதாவது: கர்நாடக மாநில எல்லையில் உள்ள சிலாமந்துார் சோதனைச் சாவடியில், இரவு பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியில் வந்த வாகனம் ஒன்றை சோதனையிட்டனர். அந்த வாகனத்தில், பை ஒன்றில், 35 இலட்ச ரூபாய் பணம் கட்டுக் கட்டாக, மறைத்து வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பணத்தையும், வாகனத்தையும் பொலிஸ் பறிமுதல் செய்தனர். வாகனத்தை ஓட்டி வந்த சாரதி கைது செய்யப்பட்டார்.

பறிமுதல் செய்யப்பட்ட அந்த வாகனம், சத்ய சாய் மத்திய அறக்கட்டளைக்குச் சொந்தமானது என தகவல் வெளியாகியுள்ளது. சாரதியைத் தவிர,அந்த வாகனத்தில் வேறு எவரும் இல்லை. இந்த பணம், புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்திலிருந்து, பெங்களூருக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. சாரதியிடம் விசாரணை நடத்திய பின்னர், இது தொடர்பான முழுமையான விவரங்கள் தெரிய வரும். இது தொடர்பாக, சிலாமந்தூர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.இவ்வாறு ஷா நவாஸ் காசிம் கூறினார்.



தமிழக சட்ட சபைத் தேர்தலில், தான் போட்டியிட்ட ஸ்ரீரங்கம் தொகுதியில் வெற்றிபெற்ற முதல்வர் ஜெயலலிதா,அப்பகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்க வந்தவேளை 190 கோடி ரூபா நிதியுதவியிலான திட்டப் பணிகளை அந்தத் தொகுதிக்கு ஆரம்பித்து வைப்பதனைக் காணலாம்.

## சுவிஸ்வங்கியிலுள்ள கறுப்புப் பணத்தில் அரைவாசி காங்கிரஸிற்கு சொந்தம்

### என்கிறார் மேனகா காந்தி



(புதுடில்லி)

சுவிஸ் வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்தியாவின் கறுப்புப் பணத்தில் பாதி காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் மற்றும் அக்கட்சியின் ஆதரவாளர்களுக்கும் சொந்தமானது என பா.ஜ.க எம்.பி. மேனகாகாந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மேனகாகாந்தி, காங்கிரஸ் கட்சி சி.பி.ஐயை அதன் லொக்கரில் வைத்துள்ளது என்றும் தேவைப்படும்போது அதைப் பயன்படுத்துகிறது என்றும் குற்றம்சாட்டினார்.

பாபா ராம்தேவ் மற்றும் சமூக ஆர்வலர் அண்ணா ஹசாரேவிடம் காங்கிரஸ் கட்சி நடந்துகொள்ளும் முறை கௌரவமானதாகத் தெரியவில்லை என்று அவர் கண்டனம் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர்களின் பணம் சுவிஸ் வங்கிகளில் வைக்கப்பட்டுள்ளது. எனவே தான் கறுப்புப் பணத்துக்கு எதிராக குரல் எழும்போதெல்லாம் அதை நசுக்க முற்படுகிறது என்றார் அவர்.

ஆகஸ்டு 16ஆம் திகதியில் இருந்து அண்ணா ஹசாரே உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருப்பது பொருளாதார சுதந்திரத்திற்கான போராட்டம் என அவர் வர்ணித்தார்

# தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலக வேண்டும்



(சென்னை)

தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலக வேண்டும் என்பது பெரும்பாலான தொண்டர்களின் விருப்பமாக உள்ளது என முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

திமுகவிலிருந்து விலகி உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலே காங்கிரஸ் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றும்.

விஜயகாந்த் ஆக்கபூர்வமான எதிர்க் கட்சித் தலைவராக செயற்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்கள் நம்பிக்கைக்கு ஏற்ப விஜயகாந்த் செயற்பட வேண்டும்.

2ஜி வழக்கு உச்சநீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் நடைபெறுகிறது. அவ்வழக்கில் சி.பி.ஐ 2 குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்துள்ளன. 3ஆவது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய உள்ளது. விரைவில் அந்த வழக்கு முடிந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதே வேளையில் குற்றவாளிகள் சேர்த்துள்ள கள்ளச் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

தி.மு.க ஆட்சியில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகத்தைப் புறக்கணிப்பதாக ஜெயலலிதா மீது திமுகவினர் புகார் தெரிவிக்கின்றனர். கட்டுமானப் பணிகள் நிறைவு பெறாத நிலையில், அவசர கோலத்தில் அள்ளித் தெளித்த கதையாக அதன் திறப்பு விழா நடைபெற்றது. பிரதமர் அதைத் திறந்தபோதே திரைப்பட பாணியில் அங்கு அரங்கு அமைத்ததே அதற்குச் சான்று. இப்போதைய சூழலில் தலைமைச் செயலகம் நடத்த அந்த கட்டடம் உதவாது. அந்த விடயத்தில் திரும்பத் திரும்ப முதல்வர் மீது கருணாநிதி புகார் கூறுவது குழந்தைத்தனமாக உள்ளது.

தமிழகத்தில் காங்கிரஸ் தலைவரை மாற்ற வேண்டும். கட்சி மேலிடம் யாரை நியமித்தாலும் நாங்கள் ஏற்போம். புதிய தலைவர், மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியச் செய்திகள்





தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர்: தயாகரன் ரம்மியா
முகவரி: மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.யாழ்



21.06.2011

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிறுவர் மீதான துஷ்பிரயோகத்தை தடுக்க ஆயர்களை அழைக்கிறது வத்திக்கான்

(ரோம்)

கத்தோலிக்க பாதிரிமாரால் சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்களைத் தடுப்பதற்கு புதிய நெறிமுறைகளை உருவாக்குவதற்காக ரோமில் அடுத்த மாதம் நடத்தப்படவுள்ள மூன்று நாள் மாநாட்டுக்காக உலகெங்கிலுமிருந்து கத்தோலிக்க ஆயர்மார் 200 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ரோமிலுள்ள ஜெய்சுயிட் பல்கலைக்கழகத்தில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரோமுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக, மாநாட்டில் பங்குகொள்ளவுள்ள ஆயர்மார் அனைவரும், தத்தமது பிரதேசங்களில், கூட்டங்களை நடத்தி உள்ளூரில் பாதிக்கப்பட்டவர்களுடனான சந்திப்புகளை மேற்கொள்ள வேண்டுமென வத்திக்கான் தெரிவித்துள்ளது.

குறிப்பாக கத்தோலிக்க வட்டாரங்களில், தாம் சிறுவர்களாக இருந்த போது கத்தோலிக்க மத குருமாரால் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டுவோருடன் சந்திப்புகளை ஆயர்கள் நடத்த வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

அயர்லாந்து திருச்சபை வட்டாரங்களில் நடந்துள்ளதாகக் கூறப்படும் சிறுவர் துஷ்பிரோக சர்ச்சைகளில், வத்திக்கானின் ஆணைப்படி விசாரணைகளை நடத்திவரும் பிரிட்டனிலுள்ள புகழ் பெற்ற உளவியல் நிபுணர் பேராசிரியர் ஷெய்லா ஹொலின்ஸும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேச இருக்கின்றார்.

மதகுருமாரால், சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்களை இல்லாதொழிப்பதையே கத்தோலிக்க ஆயர்கள் தலையாய கடமையாக கொள்ள வேண்டுமென இரண்டு மாதங்களுக்கு முன்னர் வத்திக்கான் தலைமையகம் அறிவித்திருந்தது.

திருச்சபைச் சட்டத்தின் கீழ், துஷ்பிரயோக மதகுருமாருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவரும் வத்திக்கான் அதிகாரி, மொன்சிங்னோர் சார்ல்ஸ் சிக்லுனா, முன்னைய ஆயர் மாநாடுகள் இந்த விவகாரத்தில் புதிய வழிகாட்டு நெறிகளை வரைவதில் அவ்வளவு அக்கறை காட்டவில்லையென்பதை ஒப்புக்கொள்கின்றார். அயர்லாந்து பாதிரிமாரின் விவகாரங்கள் தொடர்பில், தான் நடத்திய விசாரணைகள் பற்றிய அறிக்கையை அடுத்த ஆண்டின் முற்பகுதியில் வெளியிடுவதாக வத்திக்கான் கூறியுள்ளது.

கடந்த காலங்களில் திருச்சபை வட்டாரங்களால் புரியப்பட்ட சிறார் துஷ்பிரயோக சம்பவங்களின் போது. இங்கிலாந்து மற்றும் வேல்ஸிலுள்ள கத்தோலிக்க தலைமைப்பீடங்கள் அவற்றை கையாண்ட வழிமுறைகள் மற்ற நாடுகளுக்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்திருப்பதாகவே வத்திக்கான் கருதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பின்லேடன் கொலை குறித்து விசாரிக்க புதிய குழுவை அமைக்கிறது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்து விசாரிக்க, ஏற்கனவே அமைக்கப்பட்ட குழு செயற்படுவதற்கு முன்பே, பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளானதால், புதிய குழு விரைவில் அமைக்கப்படும் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஒசாமா பின்லேடன், பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்தது எப்படி, அவரைப் பற்றிய தகவல் எப்படி அமெரிக்காவுக்குக் கிடைத்தது, பாகிஸ்தான் அரசிடம் தெரிவிக்காமல் ஒசாமாவை அமெரிக்கா கொன்றது போன்றவை குறித்து தீர விசாரிக்க, உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஐந்து பேர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை, பிரதமர் யூசுப் ரசா கிலானி சமீபத்தில் நியமித்தார்.

ஆனால், அக்குழுத் தலைவரும், இன்னொரு உறுப்பினரான உயர் நீதிமன்றம் முன்னாள் நீதிபதியும், தங்களிடம் இதுகுறித்து முறையாக கலந்து ஆலோசிக்காமல், தங்கள் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டதாகக் குற்றம்சாட்டினர்.

விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு செயற்படும் முன்பே சர்ச்சையில் சிக்கியதால், புதிய குழு விரைவில் அமைக்கப்படும் என பாகிஸ்தான் சட்டத் துறை அமைச்சர் மவுலா பக்ஷ சாண்டியோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.




# சீனாவில் தொடர்மழை; 50 இலட்சம் மக்கள் பாதிப்பு

(பீஜிங்)

சீனாவில் தொடர்மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் அதன் கிழக்குப் பகுதி முழுவதும் 50 இலட்சம் பேர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அங்கு உணவுப்பொருட்கள் விலை கடுமையாக உயர்த்துள்ளதாக அங்குள்ள செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. இதில் ஹுபெய் மற்றும் ஷெஜியாங் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறன. மேலும் 7 ஆயிரம் வீடுகள் தரமைட்டமானதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுச் செலவாக (930 மில்லியன் டொலர் ) தேவைப்படும் எனக் கருதப்படுகிறது.

# அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் பாகிஸ்தான் திரும்புகிறார் முஷாரப்




(லாகூர்)

கார்கில் போரில் பாகிஸ்தான் தோல்வி அடைந்ததற்கு நான் தான் பொறுப்பேற்க வேண்டும் என நவாஸ் ஷெரீப் கூறுவது தவறு. காஷ்மீர் மற்றும் கார்கில் பிரச்சினைகளில் மக்களை தவறாக முன்னடத்திச் செல்வதை அவர் நிறுத்த வேண்டும். அடுத்த வருடம் மார்ச் 23ஆம் திகதி, நான் பாகிஸ்தான் திரும்புவேன் என்று பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷராப் கூறியுள்ளார்.

கார்கில்போரில் பாகிஸ்தான் படுதோல்வி அடைந்ததற்கு அப்போதைய இராணுவத் தளபதியான முஷாரப் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் குற்றம்சாட்டியிருந்தார். அவருக்குப் பதிலளிக்கும் விதத்தில், தன் கட்சித் தொண்டர்களிடையே வீடியோ மூலம் பேசிய முஷாரப் கூறியதாவது:

கார்கில் போரின் போது, அப்போதைய இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் ஒப்பந்தம் மேற்கொண்டது பற்றி பொய் சொல்கிறார் நவாஸ். கார்கில் போரின் உண்மை நிலை என்ன என்பதைப் பற்றியும் அவர் பேசவில்லை. கார்கிலில் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியும். இப்போது தனக்கு எதுவுமே தெரியாதது போல நடிக்கிறார். 1999, பெப்ரவரி 12ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட லாகூர் ஒப்பந்தத்தில், காஷ்மீர் பற்றி ஒரு வார்த்தை கூட கிடையாது.

ஆனால், காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க, தான் முயன்றதாக நவாஸ் கூறுகிறார். கார்கில் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகளில் மக்களைத் தவறாக முன்னடத்திச் செல்லும் போக்கை அவர் கைவிட வேண்டும். வரும் 2013 பொதுத் தேர்தலில் கலந்து கொள்வதற்காக, அடுத்தாண்டு மார்ச் 23ஆம் தேதி நான் பாகிஸ்தான் திரும்புவேன். இவ்வாறு முஷாரப் தெரிவித்தார்.



# குறள் சொல்லும் கதைகள் -46

**இன்பத்துப் பால்**

## நுட்பமானவர்

கஜேந்திரனைப் பற்றி ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள் வித்தியா. அவனது நினைவைப் பற்றி இன்றுவரை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நாளாவது அவன் அவளது மனம் நோகும் படியாக நடந்து கொண்டதில்லை. மூன்று வருடங்களுக்கு முன்பு அவள் அவனைக் கண்டாள்.

அவள் என்பொழுதும் எதையும் பெரிதாக மதித்ததில்லை. அவளுடன் படிக்கும் மாணவர்கள் பலர் அவளைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். அவளின் முன் அசடு வழிய நிற்பார்கள். அவள் அவர்களை ஒரு பொருட்டாக மதித்தில்லை. அவள் கண்ட ஆண்கள் எல்லோரையும் விட, கஜேந்திரன் மிகவும் வித்தியாசமானவன். மிகவும் நுட்பமானவன் என்றே சொல்லலாம். கஜேந்திரன் அவளுக்குக் கெடுதல் எதுவும் செய்தவன் அல்லன். தினமும் அவளின் பின்னால் வருவான். ஆனால் அவளுடன் எதுவும் பேசமாட்டான். எனினும் வித்தியாவின் தோழிகள் அவளைக்கேலி செய்வதுண்டு. தோழிகள் கேலிசெய்யும் போது வித்தியா ஆத்திரத்தின் எல்லையில் நிற்பாள். ஏற்கனவே அவளது தாயாரின் சகோதரன் வரதராசன் தனது மகனான அங்கஜனுக்கு அவளைத் திருமணம் செய்ய எண்ணியுள்ளார். அவளது தாயாரும் தனது சகோதரனின் மகனையே வித்தியாவுக்கு திருமணம் செய்வதாக முடிவு செய்திருக்கிறாள். இடையில் இவன் குறுக்கிட்டால் எப்படி இருக்கும். அவள் அங்கஜனை விரும்பாவிட்டாலும் பெற்றோரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது பிள்ளைகளின் கடமை என்று நினைத்திருந்தாள்.

ஆனால் கஜேந்திரன் தினமும் அவளைப் பின் தொடர்ந்து செல்வான். இது பிடிக்காததால் ஒரு நாள் அவள் சொன்னாள்; "நீ என்னைத் தொடர்ந்து வருவது எனக்குப்பிடிக்கவில்லை. எனக்கு ஆண்களைப் பிடிக்காது. எனக்கென நிச்சயிர்க்கப்பட்ட எனது மாமனின் மகனையே எனக்குப் பிடிப்பதில்லை. இனி மேல் நீ என்னைப்பின்தொடர்ந்து வந்தால் செருப்பால் அடிப்பேன்". ஆத்திரத்துடன் சொன்னாள் வித்தியா.

"நான் உங்களைப் பின் தொடர்கிறேனா..? அப்படி நீங்கள் நினைக்கிறீர்களா...? இது பொதுவீதி. நான் பல்கலைக்கழகத்தில் படிக்கிறேன். பல்கலைக்கழகத்தில் பாடங்கள் தொடங்கு முன் செல்லவேண்டும். அதற்காகத்தான் செல்கிறேன். உங்களைப் பின் தொடர்ந்து வருகிறேன் என்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்? நான் நீங்கள் எனக்கு முன்செல்கிறீர்கள் என்று நினைக்கவில்லையே" அதிர்ந்து போனாள் வித்தியா.

இன்னொருநாள் தோழிகளுடன் நிற்கும் போது அவனது வகுப்புத் தோழி ஒருத்தி சொன்னாள் "நீங்கள் வித்தியாவை விரும்பாதது போலக் கதைக்கிறீர்கள். உண்மையைச் சொல்லுங்கள்; நீங்கள் வித்தியாவை விரும்பவில்லை, என்று".

"காதல் என்பது தானாக உருவாவது. இன்னொருவர் சொல்லி ஏற்படுவதில்லை. காதலை மறைக்கச் சிலர் தாம் விரும்பாதது போல நடிப்பார்கள். கோபிப்பார்கள். பொய்சொல்வார்கள். ஆனால் நான் நடிக்கவில்லை. பொய் சொல்லவில்லை. உண்மையாக நான் வித்தியாவை விரும்புறன் உயிருக்குயிராக நேசிக்கிறன். அவள் இல்லாவிட்டால் எனக்கு வாழ்வே இல்லை. காதல் என்பது இருவர் விரும்பி இணைவது மட்டுமல்ல ஒருவர் விரும்பினாலம் காதல்தான். நான் விரும்புபவள் என்னை விரும்ப வேண்டும் என்று நான் கருதவில்லை. அவள், தான் விரும்பிய ஒருவனுடன் இன்பமாக வாழலாம். ஆனால் நான் அவள் மீது கொண்ட அன்பு மாறாது. என் வாழ்நாளை அவளின் நினைவுகளோடு கழிக்க என்னால் முடியும். காதல் என்பது இரு உயிர்கள் இணைந்து மூன்றாவது உயிரை உண்டாக்குவதல்ல. இரு மனங்கள் இணைந்து ஒன்றாகி நினைவுகளில் இன்புற்றிருப்பதே காதல்" கஜேந்திரனது வார்த்தைகள் வித்தியாவின் காதில் ஒலித்தன. "எவ்வளவு மென்மையானவர் இப்படியான எண்ணம் உலகில் யாருக்கும் வரும்" விம்மினாள் வித்தியா.

"வித்தி, கஜேந்திரன் உன்கண்ணில் இருந்து போக மாட்டார். நீ பெருந் தீங்கிழைத்தாலும் அவர் கோபிக்க மாட்டார். நீ அறியாமல் கண் இமைத்தாலும், தான் உனது கண்களில் இருந்து மறைந்து விடுவோமோ என்று வருந்தமாட்டார். அந்தளவில் அவர் மிகவும் நுட்பமானவர். அவரை அடைய நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றாள் அவளது தோழி அகல்யா. அதை நினைத்து விம்மினாள் வித்தியா.

**கே.வி.குணசேகரம்.**

கண்உள்ளின் போகார இமைப்பின் பருவரார்,
நுண்ணியர் எங் காதலவர். 1126

எனது காதலர் எனது கண்களை விட்டுப் போகமாட்டார். நான் அறியாமல் இமைத்தாலும் அதற்காக வருந்த மாட்டார். அவர் அவ்வளவு நுட்பமானார்.

# என்ன செய்ய வேண்டும் ?

முதலாவது, மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைத்து கதை சொல்வதை நாங்கள் நிறுத்த வேண்டும். நாங்கள் சொல்வது பொய் என்பது எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் அதை மற்றவன் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதை மற்றவன் நம்பாவிட்டால் எங்களுக்குக் கெட்ட கோபம் வரும். நாங்கள் அரிச்சந்திரன் பரம்பரை. நாங்கள் எங்க பொய் சொன்னனாங்கள் என்று வரிந்து கட்ட பலர் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் அகதிக் கோரிக்கையில் என்ன கதை எழுதினார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் தெரிந்திருக்கும்.

மற்றவர்களைப் புத்திசாலிகள் என்று நினைத்தோம் என்றால், அவர்களை நம்ப வைக்க நாங்கள் அதிகமாய் சிந்தித்து நம்பக் கூடிய கதைகளைச் சொல்ல முடியும். ஆனால் நாங்களோ..? நான் சொல்றன், நீ நம்பு என்று பிடிவாதமாக நிற்கிறோம்.

நாங்கள் சொல்வது பொய் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் உண்மையைச் சொன்னால் எங்களுக்கு அவமானம் என்று நினைக்கிறோம்.

இரண்டாவது, நாங்கள் எதைக் கேட்க விரும்புகிறோமோ, அதைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களை நம்புவதை நிறுத்த வேண்டும். எங்களுக்கு மிகவும் பிடித்தமான விடயம் இதுதான். நாங்கள் நம்ப விரும்புபவற்றை எங்களுக்குச் சொல்லி எங்களைக் குஷிப்படுத்துபவர்களைத் தான் நாங்கள் நம்புகிறோம்.

இதைத்தான் எங்கள் ஆய்வாளர்களும் ஊடகங்களும் செய்து கொண்டிருந்தன. தலைவர் திட்டம் வைத்திருக்கிறார். அவர் காரணம் இல்லாமல் இராணுவத்தை உள்ளுக்கு வர விட்டிருக்க மாட்டார். உள்ளுக்கு வர விட்டுட்டு அடிக்கப் போறாங்கள். இதைத்தானே நாங்கள் கேட்க விரும்பினோம். இல்லை, புலிகள் விட்டுட்டு ஓடுறாங்கள் என்று சொல்பவர்களையா நாங்கள் நம்பப் போகிறோம்?

எங்களுடைய அழிவின் முதல் காரணமே, நாங்களே சொன்ன பொய்களை நாங்களே நம்பப் புறப்பட்டது தான் நான்காவது பெரிய இராணுவத்தை வெளியேற்றினோம்.

பிரேமதாசாவின் எச்சரிக்கை, இந்தியாவில் அரச மாற்றம் காரணமாக இந்தியா தானே வெளியேற முடிவு செய்தது. புலிகள் தாங்கள் விரட்டினோம் என்று பிரசாரம் செய்தார்கள். இந்தப் பொய்யை நம்பியதால் தான் எங்கள் பலம் மீது எங்களுக்கு அசாதாரண நம்பிக்கை வந்தது. தலைக்கனம் வந்தது. கடைசியில் உள்ளுக்கு வரவிட்டு அடிக்கப் போறாங்கள் என்று நம்ப வேண்டி வந்ததும் இந்த போதை தலைக்கேறியதால்தான்.

புலிகள் பிரசாரத்திற்காகச் சொன்ன பொய்கள் எல்லாமே புலன் பெயர்ந்தவர்களைக் குஷிப்படுத்தி, பணம் திரட்டும் நோக்கத்தில் செய்யப்பட்டவை. எங்களுக்கு எது கேட்கப் பிடிக்குமோ அதைப் புலிகள் சொலலி எங்களைக் குஷிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் புலிகள் மக்கள் வாழும் பகுதியிலிருந்து ஷெல் அடித்தார்கள் என்று அரசாங்க அதிபர் பெண்மணி கூறியிருந்தார். இந்தச் செய்தி அப்போதே வெளியில் வந்திருந்தது. நாங்கள் அதை நம்பவில்லை. இன்று அரசாங்க விசாரணையில் அவர் அதைச் சொன்னதும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் முதல் புலன் பெயர்ந்த பத்திரிகைகள் வரைக்கும் எகிறிப் பாய்கினறன.

முன்பு எம்.பி. வினோதராதலிங்கம் அகதி முகாம்களில் நிலைமை நன்றாக இருக்கிறது என்றதும் இங்கே ஆய்வாளர்கள் அவர் தமிழினத்திற்கு துரோகம் இழைத்து விட்டார் என்கிறார்கள். அதாவது இவர்கள் கேட்க விரும்புகின்றவற்றை மட்டும் தான் நீங்கள் சொல்ல வேண்டும். இல்லையேல் துரோகி ஆக்கப்படுவீர்கள்.

இந்தப் பொய்யர்கள், ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள் எங்கள் சமூகத்தில் நிராகரிக்கப்பட வேண்டும்.

மூன்றாவது, தியாகி துரோகி என்ற கறுபபு வெள்ளைக்குள் எங்கள் அரசியல் முடக்கப்படுவது நிறுத்தப்பட வேணடும். பொன்னம்பலம் ராமநாதனைத் துரோகி என்றது முதல் கே.பி துரோகம் இழைத்து விட்டார் என்று வை.கோ, நெடுமாறன் சொல்வது வரைக்கும் எங்களுடைய தவறுகளுக்கும் முட்டாள்தனங்களுக்கும் மற்றவர்கள் மீது பழியைப் போடும் பழக்கம் தொடர்ந்து கொண்டே வருகிறது.

பொன்னம்பலத்துக்கு ராமநாதன் துரோகி, அமிர்தலிங்கத்திற்கு பொன்னம்பலம் துரோகி, மாத்தயாவுக்கு அமிர்தலிங்கம் துரோகி, கருணாவுக்கு மாத்தயா துரோகி, பிரபாகரனுக்கு கருணா துரோகி. இதில் என்ன நீதி இருக்கிறது? மற்றவரைத் துரோகி என்று பட்டம் சூட்டவும் கொலை செய்யவும் இவர்களுக்கு அங்கீகாரம் தந்தது யார்? தீர்ப்பளித்தவர்களே கடைசியில் துரோகி என்று கொல்லப்பட்ட போது, அவர்களைப் பாதுகாக்க யாரும் இருக்கவில்லையே?

தியாகி, துரோகி என்பதற்கெல்லாம் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட எந்த அளவுகோலும் இல்லை. எவரும் தன்னோடு ஒத்துப் போகாத எவரையும் துரோகி என்று கூறலாம். ஒரு காலத்தில் துரோகி என்று கொல்லப்பட்டவர்கள் தோண்டி எடுக்கப்பட்டு தியாகிகளாக முடி சூட்டப்பட்டதற்கு பல உதாரணங்களைக் காட்டலாம். கொலை, கொள்ளை எதையும் செய்ய அஞ்சாத மாபியாக் கூட்டம் தங்களில் யாராவது மனம் திருந்தினால் துரோகம் என்றுதான் கொல்கிறது. தாங்கள் செய்வது சட்டவிரோதமான செயல் என்று நினைப்பதில்லை.

கூட்டணிக்குப் பின்னால் வந்த எங்கள் அரசியல் எல்லாமே தியாகி, துரோகி என்ற வரையறைக்குள்தான் சிக்கிக் கொண்டிருக்கிறது. எங்கள் இனத்தைக் கொல்வதையே துரோகம் என்ற பெயரில் நியாயப்படுத்தும் அளவுக்கு எங்களை ஒரு கொலை வெறிச் சமூகமாக்கியிருக்கிறது. இது கடைசியில் மனநோயாகி, சணம் வாதம் சணம் பித்தம் என்பது போல, ஒரே நபரையே மாறி மாறி தியாகி, துரோகி என்று கூறும் நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது. மற்றவர்களை துரோகிகள் என்று மண்டையில் போட்டவர்கள் இன்று தங்களுக்குள் பிளவு பட்டு துரோகப்பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதெல்லாம் நாங்கள் வளர்த்து விட்ட பாரம்பரியத்தின் விளைபயன். தங்களுடைய தோல்விகளுக்குப் பழியைப் போடவும் தங்கள் இயலாமையை நியாயப்படுத்தவும் உருவாக்கப்பட்டது தான் துரோகிப் பட்டம். கொலைகாரர்களைத் தியாகியாகப் போற்றியும், உண்மையான தியாகிகளை மண்டையில் போட்டு துரோகியாக்கியும் தியாகி, துரோகி என்று எங்கள் அரசியலைச் சிறுமைப் படுத்தும் பண்பை நாங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

அடுத்த இரண்டு கருத்துக்களும் உங்களில் பல பேரை நெளிய வைக்கும். நாங்கள் பயங்கரவாதத்தை மறுதலிக்கவேண்டும். இன்றைக்கு தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரி என்கிறோம். புலிகள் மீதான தடையை நீக்கு என்று கேட்கிறோம். காரணம் என்ன? எங்களுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரமும் ஆதரவும் தேவை என்ற அடிப்படையில். தேசியத் தலைவர் மாதிரி எங்களுக்குத் தேவைப்பட்டால் காலில் விழுவோம், தேவையில்லாவிட்டால் துரோகி என்போம் என்று சர்வதேசத்துடன் அரசியல் நடத்த முடியாது. வடகொரியா, ஈரான், எரித்திரியா போல சர்வதேச அங்கீகாரம் எங்களுக்குத் தேவை இல்லை என்று கூறி எல்லாரையும் பகைத்து அரசியல் நடத்த முடியும் என்று நாங்கள் நினைத்தால் அவர்களின் வழியைக் கடைப் பிடித்து எங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளலாம். அப்புறமாய் நாங்கள் அரசியல் அனாதைகள் என்று ஒப்பாரி வைப்பதில் பயன் இல்லை.

சர்வதேசம் உதவி செய்வதாக இருந்தால் தன்னுடைய விதிமுறைகள், நடைமுறைகள், ஜனநாயகப் பாரம்பரியங்கள் மட்டுமல்லாமல், தங்களுடைய சொந்த நலன்கள் உட்பட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில்தான் உதவி செய்யும் என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில்தான் புலிகளை ஆயுதங்களைக் கைவிட்டு சமஷ்டியை ஏற்று ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும் என்று சர்வதேச சமூகம் வற்புறுத்திக் கொண்டிருந்தது.

நாங்கள் பேய்க்கு வாழ்க்கைப்பட்டு புளியமரத்தில் ஏறினோமா? இல்லை, இயல் பாகவே மற்றவர்களை மதிக்காத சுயநலப் போக்குள்ள இனமா? நாங் கள் எங்கள் திமிர்த்தனமான போககை அங்கீகரிக்கும்படியே வற்புறுத்திக் கொண்டிருந்தோம். அதற்கு நாங்கள் கொடுத்த விலை என்ன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

எங்களுடைய நியாயமான போராட்டத்தை ஹைஜாக் பண்ணி அதை பயங்கரவாதமாக்கியது புலிகள். அந்தப் பயங்கரவாதத்தை. நாங்கள் எங்கட தறுதலைப் பிள்ளையை பாதுகாக்கும் மனோ பாவத்தில், போராட்டம் என்று நியாயப்படுத்தி மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைத்து கதைசொல்லி எங்களை ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம்.

தமிழ் சமூகத்தில் புலிகள் ஊன்றிய இந்த வக்கிர உணர்வு அகற்றப்பட வேண்டும். நாங்கள் அமைதி விரும்பிகள். எங்களுக்கு இலங்கையில் இனரீதியான ஒடுக்குமுறை இருக்கிறது. அதை எதிர்கொள்வதற்காக நாங்கள் ஜனநாயக ரீதியில் ஆதர வைத் தெரிந்திருந்தோம். ஆனால் புலிகள் வந்து அதை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு எங்கள் விருப்பத்திற்கு மாறாக பயங்கரவாதம் ஆக்கி விட்டார்கள். அந்தப் பயங்கரவாதத்திற்கு எங்களுக்கு சம்பந்தமில்லை.

கனடாவில் பிரெஞ்சுக்காரருக்கு இருப்பதைப் போன்று எங்களுக்கு சம உரிமை தரும் பட்சத்தில், ஒரு ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுக்குள் வாழ நாங்கள் தயார். இல்லை, நாங்கள் இரண்டாம் தர பிரஜைகளாகத் தான் வாழ வேண்டும், நாங்கள் வந்தேறுகுடிகள், எங்களுக்கு எங்கள் அடிப்படை உரிமையைக் கேட்க உரிமையில்லை என்று சிங்கள அரசு பிடிவாதம் பிடித்தால் நாங்கள் பிரிந்து போவதற்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள், அதற்கான சர்வதேச பார்வையாளர்களுடனான வாக்களிப்பிற்கு வழி வகை செய்யுங்கள் என்று கேட்பது நியாயமானது. இதில் நாங்கள் பொய் ஒன்றும் சொல்லவில்லை. எங்களுடைய நியாயமான கோரிக்கையை அவர்களுக்குப் புரிந்த மொழியில், அவர்கள் ஏற்றுக் கொள்கின்ற நடைமுறைகளின் அடிப்படையில் விளங்கப் படுத்துகிறோம் அவ்வளவுதான்.

எரித்திரிய விடுதலை அமைப்பு 91 இல் தலைநகர் அஸ்மாராவைக் கைப்பற்றி தற்காலிக அரசை அமைத்ததும் அறிவித்தது என்ன? இரண்டு வருடங்களுக்குள் சர்வசன வாக்கெடுப்பு நடத்தி சர்வதேச அங்கீகாரம் பெறப்படும். அதற்கான ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஐ.நா• தீர்மானம் நிறைவேற்றி ஐ.நா. பார்வையாளர்களுடன் 93 இல் நடத்தப்பட்ட தேர்தல் சர்வதேச அரங்கில அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்து அதன் சுதந்திரம் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.



புலிகளும் தமிழீழத்தைக் கைப்பற்றியிருந்தார்கள். இந்திய இராணுவம் வெளியேறி, பிரேமதாச ஆட்சியுடன் குலாவிய போது கைப்பற்றியிருந் தார்கள். சந்திரிகாவினால் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்படும் வரைகக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில்தான் தமிழ்ப் பிரதேசம் இருந்தது. இந்தக் காலத்தில் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற நாங்கள் என்ன செய்தோம்?

புலிகள் சமாந்தரமான அரசாங்கத்தை நடத்துகிறார்கள். நீதிமன்றம், சட்டக் கல்லூரிகள், வைப்பகம், வெதுப்பகம் வைத்திருக்கிறார்கள் என்று எங்களை நாங்களே குஷிப் படுத்தி சுய இன்பம் கண்டதை விட நாங்கள் சர்வதேச ரீதியாக அங்கீகாரத்தைப் பெறவோ, இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தி எங்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெறவோ முயற்சிக்கவில்லை.

ஒரு அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களுக்கு அந்த அரசுக்கு அங்கீகாரம் தேட முடியாமல் போனதன் காரணம் என்ன? எங்களுக்கு ஜனநாயக மரபுகளில் விருப்பம் இல்லை. மக்களின் வாக்குகளால் பலத்தைப் பெற்று ஆட்சி அமைக்கும் பண்பைப் பழக முடியவில்லை. நினைத்த யாரையும் மண்டையில் போடலாம். பிறகெதற்கு இவர்களின் அங்கீகாரம் என்று யார் எவரென்றில்லாமல் மண்டையில் போடப் போய் தானே இந்தியா மகிந்தவுடன் ஒட்டிக் கொண்டது. இத்தனை மக்கள் அழிவின் போதும் சர்வதேச சமூகம் பாராமுகமாக இருந்தது.

வடக்கு கிழக்கு இணைப்பு என்ற இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கிடைக்க இருந்த அற்ப விடயத்தைக் கூட, அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி என்று குழப்பியவர்கள் யார்? இன்று எந்த விதத்திலும் தமிழரின் பூர்வீக தாயகம் வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேசம் என்ற கருத்தை வலியுறுத்த முடியாமல் போனதற்கு காரணம் யார்? வடக்கும் கிழக்கும் இணைப்பில் இருக்கக் கூடாது என்று நீதிமன்றம் போய் பிரிவை நிரந்தரமாக்கிய ஜே.வி.பி இன்று யாழ்ப்பாணத்தில் யாரோடு அரசியல் கூட்டுக்கு முயற்சிக்கிறது? புலிகளால் அவையேற்றப்பட்டு புலன் பெயர்ந்த கூட்டத்தால் தூக்கிக் கொண்டாடப்பட்ட பத்மினி சிதம்பரநாதனுடன்.

நாங்கள் நடத்திய அரசியலின் விளைபயன் இதுதான்.

**'தாயகம்' இதழில்**
**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**எழுதிய கட்டுரையிலிருந்து**

# குறிகாட்டுவான் இறங்குதுறையில் இட நெருக்கடி பயணிகள் படகுப் போக்குவரத்து தாமதம்



(ஊர்காவற்துறை)

நெடுந்தீவு, நயினாதீவு போக்குவரத்து மார்க்கமாக விளங்கும் குறிகட்டுவான் இறங்குதுறையில் பயணிகள் படகுகள் தரித்து நிற்பதில் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளதாக நெடுந்தீவுப் படகோட்டிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் நெடுந்தீவு, நயினாதீவு பகுதிக்கான பிரயாணிகள் போக்குவரத்து ஓர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவையில் ஈடுபட்டுவந்தன. தற்போது ஏற்பட்டிருக்கும் அமைதிச் சூழலில் நயினாதீவு - நாகவிகாரையினை நோக்கித் தென்பகுதி மக்கள் தினமும் நூற்றுக்கணக்கில் வந்து போகின்றமையால் காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரை படகுகள் அரை மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை நடைபெறுவதால் எந்நேரமும் நயினாதீவிற்கான போக்குவரத்துப் படகுகள் பாலத்தில் தரித்து நிற்பதனால் நெடுந்தீவு சேவையில் ஈடுபடும் படகுகள் குறிகட்டுவான் பகுதிக்கு அண்மித்து பலமணி நேரம் கடலில் தரித்து நின்றே பாலத்திற்குச் செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் குறிகட்டுவான் இறங்குதுறை ஊடான போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்காக புங்குடுதீவு கண்ணகியம்மன் பாலத்தின் ஊடாகவும் நயினாதீவுக்கான போக்குவரத்துக்கள் மேற்கொள்ளப்பட்டபோதும கடந்தகால யுத்தத்தினால் அப்பாலம் சிதைவுற்றுள்ளமையால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் எதிர்வரும் யூலை 01 ஆம் திகதி நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலய பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ளமையால் மேலும் பல போக்குவரத்து நெருக்கடிகளை சந்திக்க வேண்டி ஏற்படலாம் என படகோட்டிகள் கவலை தெரிவிக்கின்றனர். (27)

# சுகாதாரம் பேணல் புதிய நடைமுறைகள்

எதிர்வரும் வருடத்தில் இருந்து தை மாதம் முதலாம் திகதி முதல் அந்த வருடத்திற்கான பிரதேச சபையின் விற்பனை அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். அப்படி இல்லாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

நேற்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற அப்பகுதி உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கான புதிய சுகாதார நடைமுறை தொடர்பான விளக்கமளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். உணவகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய புதிய நடைமுறைகள் குறித்து அவர விலாவாரியாக விளக்கமளித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கடந்த நெருக்கடி நிலையான காலங்களில் வர்த்தகர்கள் எதிர்நோக்கிய கஷ்டங்கள் கருதி அந்த காலங்களில் நாம் சட்டங்களை இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தவில்லை.

இப்போது நிலைமை அப்படியல்ல எனவே இந்த புதிய சூழலில் வாழும்போது நம் சுகாதாரமான முறையில் செயற்பட வேண்டும்.

இப்பகுதியில் தொற்றுநோய் ஏற்படுமாக இருந்தால் அதற்கான பொறுப்பு என்னையும் சாரும். எனவே அப்படியொரு நிலை ஏற்படாது பாதுகாத்துக்கொள்ள வேண்டியது எங்கள் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

### தமிழர் பிரச்சினை...

கிழக்கு மாகாணங்களில் பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீள் குடியேற்றம் மற்றும் வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

எவ்வாறெனினும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக அரசியல் தீர்வு ஒன்று அவசியமாகும். அதனை வழங்கி ஆக வேண்டும். அந்தவகையில் அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும். அதனைத்தான் நான் ஆரம்பத்திலிருந்து கூறி வருகின்றேன் எனத் தெரிவித்தார்.

### அதிக மாணமவர்கள்...

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும்.

இம்முறை 3200 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள அதேவேளை இதில் ஆரம்ப பிரிவு ஆசிரியர் பயிற்சி நெறிக்கே கூடுதலான மாணவ்ர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புதிய ஆசிரியர பயிற்சி மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பன்வை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் திஸ்ஸஹேவா விதாரண தெரிவித்துள்ளார்.

## வெடிமருந்துக்கு அரசு அனுமதி

வடபகுதியிலுள்ள மக்கள் கிணறுகளைத் தோண்டுதல் போன்ற வேலைகளுக்காக மிகக கஷ்டப்படுவதால், அவர்களுக்கு வெடிமருந்துகளைக் கொடுக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளதாம், கட்டட வேலைகளுக்கு என்று லைசென்ஸ் பெற்றுக கொண்ட வடமாகாண மக்கள் இந்த வெடிமருந்துகளை பெறலாம். வெடிமருந்துகளைச் சேமிக்கவென வவுனியாவிலுள்ள குடகச்சாகொடி என்ற இடத்தில் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முன்னர் வெடிமருந்துகள் வடமத்திய மாகாணத்திலுள்ள. அனுராதபுரத்திலிருந்து வடபகுதிக்குக் கொண்டுவரப்பட்டன. இப்போது போர் முடிந்ததை அடுத்து வடமாகாணத்தில் ஒவவொரு மாவட்டத்திலும் வெடிமருந்து கட்டுப்பாளர்களை அரசாங்கம் நியமித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### இளவயதுக் குற்ற...

குழுக்களின் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்.இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது அங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட உதவி பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும்போதும், தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்லும்போதும், உரிய நேரத்திற்குச் சென்றுவருகின்றார்களா என்பதைக் கண்காணித்துக் கொள்ளவேண்டும். அத்துடன் அவர்களது பாடசாலைபை களையும் சோதனையிட வேண்டும். ஏனெனில் அண்மைக்காலத்தில் குற்றச்செயலில் ஈடுபட்ட இளவயதினர் தொடர்பான முறைப்பாடுகள் பல எமக்குக் கிடைத்துள்ளன என்றார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், ஜனாதிபதியின் சிந்தனைக்கமைய, பொலிஸ்மா அதிபரின் பணிப்பின்படி இத்தகைய குழுகள் புனரமைக்கப்படுகின்றன. அத்துடன் பொலிஸ - மக்களுடன் நெருக்கமாக இருக்கும வகையில் இக்குழுக்களின் செயற்பாடுகள் அமையும். அதன் மூலம் பொதுமக்களின் பிரச்சினைகளையும் குறைத்துக்கொள்ள முடியும்.

இந்த நடைமுறை ஏனைய மாவட்டங்களிலும் உண்டு. இதன் மூலம் கிராமத்திற்குள் நடைபெறுகின்ற குற்றச்செயல்கள், போதைப்பொருள் கடத்தல் போன்ற தகவல்களை பொலிஸார் உடன்பெற்று நடவடிக்கை எடுக்கமுடியும்.

பத்துப்பேர் அடங்கிய இக்குழுவின் தலைவராக கிராம அலுவலரே செயற்படுவார். என்றும் தனியே குற்றச் செயல்களை இனங காண்பது மட்டும் இவர்களின் பணியல்ல சிரமதானம், டெங்கொழிப்பு போன்ற பொதுப் பணிகளிலும் பொலிஸாருடன் இணைந்து இக்குழுவினர் செயற்படமுடியும் என்றார். இதேவேளை யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது கந்தர்மடப் பகுதியில் குற்றச் செயல்கள் குறைவாகக் காணப்படுவதாகவும் எனினும் மக்களின் வசதி கருதி சார்ஜன் ஒஸ்ரின் மற்றும் அயித் ஆகிய பொலிஸ் அதிகாரிகள் கந்தர்மடம் பிரிவுக்குப் பொறுபாக நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் சனசமூக நிலையம், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், பொது மக்கள், அரச அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (26)

### அரசியல் உரிமையை...

இந்த சூழலிலாவது இலங்கைத் தீவின் பக்கம் சர்வதேச சமூகத்தின் கவனம் திரும்பியிருக்கிறது. போர்க்குற்றம் என்று கூறி அறிக்கைகள் வெளியிடப்பட்டாலும் அழிவுப்போரின் பின்னராவது தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற விருப்பங்களே சர்வதேச நாடுகளின் விருப்பங்களாக தெரிகின்றன.

இதேவேளை எமது அயலக நட்பு நாடாகிய இந்தியாவின் மத்திய அரசு ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து கடந்த சில காலங்களைவிடவும் இப்போது அதிக அக்கறைக் காட்டுவதாகத் தெரிகிறது. நட்பு நாடி தேடிவந்து நல்லெண்ணங்கள் குறித்து இந்தியா பேசிவருகிறது. இவைகள் எமக்கு சாதகமான ஒரு சூழலாகும்.

அழிவு யுத்தத்தின் மூலமே எதையும் பெறமுடியும் என்ற விருப்பங்களோடு தொடர்ந்தும் ஆயுதப் போரை நடத்தியதோடு அரசியல் தீர்வுக்கும் சுமுகமான அமைதிப் பேச்சுக்கும் இறுதிவரை உள்மன விருப்பமின்றி தடையாக இருந்து வந்த புலிகளின் தலைமை இல்லாதொழிக்கப்பட்டிருக்கும் இச்சூழலில் அரசியல் தீர்வின் பக்கம் அணிதிரண்டு வருவதற்கு தமிழ் மக்கள் அச்சப்பட வேண்டிய தடைகளும் இப்போது இங்கில்லை.

அது போல் தென்னிலங்கை அரசியல் சூழலிலும் சாதகமான ஒரு நிலைமை கனிந்திருக்கிறது. பலமுள்ள அரசாங்கம் மட்டுமே எதையும் சாதிக்க முடிந்த வல்லமை கொண்டது. அந்த வகையில் தென்னிலங்கை மக்களின் பெரும்பான்மை பலத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு இன்று பெற்றிருக்கிறது. சகல மக்களும் ஏற்றுக்கொள்ள முடிந்த தமிழ் மக்களுக்கான அரசியல் தீரவின் இலக்கு நோக்கி நகர்வதற்கான ஆரம்பங்களை முன்னெடுப்பதற்கு தென்னிலங்கை மக்களும் இப்போது தடையின்றி தயாராகவே உள்ளார்கள். அதற்கான அங்கீகாரத்தை தென்னிலங்கை மக்களிடம் இருந்து இன்று அரசாங்கம் பெற்றிருக்கிறது.

சகல தடைகளும் அகற்றப்பட்டு அரசியல் தீர்வு காண்பதற்கான சூழல் ஒன்று மறுபடியும் கனிந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சனைக்கான தீர்வினை அடைவதற்கு வழமைபோல் தடையாக இருந்து வருபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமே.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து அதிலிருந்து முன்நோக்கி நகர்வதே இன்று நடை முறைக்கு சாத்தியமான வழிமுறையாகும்.

இன்றைய உலகத்தின் போககின்படி இதையே இந்தியா உட்பட சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இதிலிருந்து தொடங்குவதற்கு அப்பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடைமுறைக்கு சாத்தியமாகாத கோரிக்கைகளை முன்வைத்து எமது மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை குழப்பித் தடைபோட்டு அரசியல் தீர்வினை அடைவதற்கு மாறாக காலம் கடத்தும் கபடநோக்கில் செயற்பட முற்படுவதை தமிழ் மக்கள் ஒருபோதும ஏற்கமாட்டார்கள்.

இன்றைக்கு எது சாத்தியமோ அதை தவிர்த்து இன்றைய சூழலில் சாத்தியமாகாத கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்தி வருவது சுயலாப அரசியல் மட்டுமே.


வெறும் தேர்தல் வெற்றிகளுக்காக முன்னோக்கிய அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு தடைகற்களாக இருப்பதை தவிர்த்து தமிழ் மக்களின் அரசியலுரிமைகளை அடைவதற்கான படிக்கற்களில் ஏறி நடந்து மனம் மாறி வரவேண்டும் என்றும் தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையை தீராப்பிரச்சினையாக கொதிநிலையில் வைத்துக்கொண்டு அதில் அரசியல் ஆதாயம் தேடுவதை கைவிட்டு நல்ல சிந்தனையோடு செயற்பட முன்வரவேண்டும் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் நாம் எமது மக்களின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் கனிந்து வந்த சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்த மறுத்த தமிழ் தலைமைகள் தமிழ் மக்கள் அழிவுகளை சுமப்பதற்கு வழி தேடியது போல் இனிவரும் காலங்களிலாவது கிடைத்திருக்கும் சந்தர்ப்பங்களை மதிநுட்பத்தோடும், சாணக்கிய தந்திரங்களோடும் அணுகி தமிழ் மக்களின் வாழ்வில் நிரந்தர நிம்மதியை உருவாக்க முன்வரவேண்டும் என செயலாளர் நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### யாழ்ப்பாணத்தில்....

நடாத்தப்படவுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் யாழ். மாவட்டத்தில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை முகாம் வெளிநாட்டு சத்திரசிகிச்சை நிபுணர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது. இம் முகாமில் உதட்டு/அன்னப்பிளவு உடையவர்கள், எரிகாயங்களுக்கு உள்ளானோர், காயங்களின்பின் பெரிய தழும்புகளை உடையவர்கட்கு பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வழங்கப்படும்.

எனவே மேற்படி சிகிச்சை தேவைப்ப டுவோர் தங்களது பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது தங்களது பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது குடும்பநல உத்தியோகத்தரிடம் உங்களது பெயர்களை பதிவுசெய்யும்படி சிகிச்சை தேவையானவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றனர்.



# யாழ்.மனைப்பொருளாதார அபிவிருத்தி 750 கடற்தொழில் குடும்பங்கள் நேரடிப் பயன்




(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் 'திவிநெகும' பத்து இலட்சம் மனைப்பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 750 கடற்தொழிலாளர் குடும்பங்கள் நன்மையடைய வுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் பத்தாயிரம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

இதற்கென யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 750 கடற் தொழிலாளர் குடும்பங்களுக்கான இத்திட்டத்திற்குரிய பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை நிகழ்வில் கலந்துகொண்ட கடல் தொழிலாளர் குடும்பங்களுக்கு கருவாடு பதனிடுதல், சிறு வியாபாரம், நண்டு வளர்ப்பு போன்ற மனைப்பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறை நிகழ்விற்கு கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ. ரவீந்திரன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்டத்தில் இருந்து குறித்த அபிவிருத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.

மேலும் எதிர்வரும் யூலை மாதம் முற்பகுதியில் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்ய வுள்ளதாகவும் அவ் விஜயத்தின் போது அமைச்சர் குறித்த பயனாளிகளுக்கான கொடுப்பனவை வழங்கவுள்ளதாகவும், யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# வன்னியில் கள்ள நோட்டு விழிப்புடன் இருக்கப் பணிப்பு

போலி நாணயத் தாள்கள் குறித்த விழிப்புணர்வுடன் இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சிறு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி சரத்குமார அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சியின் சில பகுதிகளில் போலி நாணயத் தாள்கள் பயன்படுத்தப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். இதனுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் தொடர்பாக தகவல்களை திரட்டி வருகின்றோம்.

1000 ரூபா, 500 ரூபா, 100 ரூபாத் தாள்களின் பயன்பாட்டின் போது அவதானத்துடன் இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (77)

# தடுப்பு முகாம் உறவுகளைச் சந்திக்க புதிய நடைமுறைகள் அறிமுகம்

(கிளிநொச்சி)

காணாமல் போனவர்கள் மற்றும் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்கள் தொடர்பான விபரங்களை பெறவிரும்புவோர் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கிளிநொச்சி சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி சரத்குமார மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சிறைகள் மற்றும் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்கள் தொடர்பான விபரங்களை சிறைச்சாலைகள் ஆணையகம் வெளியிட்டுள்ளது. இவ்வாறானவர்கள் பற்றிய விபரங்களையும் தொடர்புகளையும் பெறவிரும்பும் உறவினர்கள் சில நடைமுறைகளை கைவிடப்பிடிக்க வேண்டியுள்ளது.

விபரங்களை அறிய விரும்புவோர் சம்பந்தப்பட்டவர் தொடர்பான விபரங்களைத் தமது பகுதி கிராம அலுவலர் மூலமாக புகைப்படம் மற்றும் ஆவணங்களுடன் உறுதிப்படுத்தி பின்னர் பொலிஸ் நிலையத்தின் உறுதிப் படுத்தலுடன் செல்ல வேண்டும்.

இவ்வாறு உறுதிப்படுத்தாது வவுனியா மற்றும் பூசா போன்ற இடங்களுக்குச் சென்று விபரங்களை பார்வையிடுவதில் பிரச்சினைகள் உள்ளன. எனவே இவ்வாறு உறுதிப்படுத்திக் கொண்டு செல்வதன் மூலம் உறவினர்கள் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறமுடியும்.

இது சம்பந்தமான நடைமுறைகள் பொதுமக்களுக்கு தெரியாதுள்ளது. எனவே இவ்வாறானவர்கள் மேற்படி நடவடிக்கையை கடைப்பிடிக்குமாறு அவர் தெரிவித்தார். (77)

# முதலைகள் சரணாலயம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு முத்துராஜவல பிரதேசத்தில் முதலைகளுக்கான சரணாலயம் ஒன்றை அமைப்பதற்கு வன விலங்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது ஊர்வன பற்றிய ஆய்வாளர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என வனவிலங்கு திணைக்களப் பணிப்பாளர் சந்திரவா[illegible] பதிராஜா தெரிவித்தார்.

முத்துராஜவலப் பிரதேசம் இச் சரணாலயத்திற்கு மிகப் பொருத்தமான இடமாகும். இது ஆதரவற்ற முதலைகளைப் பராமரிக்கப் பயன்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தவம் கிடக்கும் தபால் பொதிகள் தரம் பிரிக்க ஊழியர்கள் இல்லை

ශ්‍රී ලංකා තැපැල්
இலங்கை அஞ்சல்
SRI LANKA POST

(கொழும்பு)

இலங்கை மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக 20,000 பதிவுத் தபால்கள் தரம்பிரிக்காமல் தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகின்றது.

இது பற்றி ஊழியர் சங்கம் கருத்து தெரிவிக்கையில், தமக்கு குறிப்பிட்டளவு நேரத்திற்கு மட்டுமே மேலதிக கொடுப்பனவு உள்ளது. அதற்கு அதிகமான வேலைக்கு கொடுப்பனவு இல்லாது வேலை செய்ய முடியாது.

தபால் அமைச்சின் செயலாளர் ஹேமஸ்ரீ பெனாண்டோ 1000 ஊழியர்களை புதிதாகச் சேர்ப்பதற்கு பொதுச்சேவை ஆணைக் குழுவின் பதிலுக்காக காத்திருப்பதாகத் தெரிவித்தார்.

# டெங்கு நுளம்பு கட்டுப்பாடு மட்டக்களப்பில் பேரணி



(மட்டக்களப்பு)

நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் வாரம் நேற்று 20ஆம் திகதி முதல் இம்மாதம் 26 ஆம் திகதி வரை சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் சதுர்முகம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் மட்டக்களப்பு நகரில் ஊர்வலம் ஒன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் மேலும் அவர் கூறுகையில், குறிப்பிட்ட இக்காலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் உரிய பிரதேச சுகாதாரப் பணிமனைகளின் ஏற்பாட்டில் இவ்விழிப்புணர்வு நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

இந்கிகழ்வில் வைத்தியர்கள் சுகாதார திணைக்கள ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இரும்புப் பொருட்கள் கடத்தல்

(வன்னி)

வன்னிப்பிரதேசத்திலிருந்து பெருமளவு இரும்புப் பொருட்களை ஏற்றி வந்த ஐந்து லொறிகளை வவுனியா பொலிஸார் நேற்று அதிகாலை கண்டுபிடித்துள்ளனர்.

மக்கள் மீள்குடியேறிய [illegible]நொச்சி, முல்லைத்தீவு பகுதியிலிருந்து இந்த இரும்புப் பொருட்கள் தெற்கே கொண்டுவரப்பட்ட போது பொலிஸாரின் சோதனையின்போது வவுனியாவில் கண்டு பிடிக்கப்பட்டது.

லொறிகளில் பயணம் செய்த பத்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் அனைவரும் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

# விபத்தில் சிறுமி பலி பஸ் வண்டி தீக்கிரை

(கொழும்பு)

9 வயதுச் சிறுமியை மோதி மரணித்த ஆடைத் தொழிற்சாலை பஸ் ஒன்றினை கோபமுற்ற பொதுமக்கள் தீமூட்டி எறித்த சம்பவம் ஒன்று மிரிஸ்வத்தை வத்துருவில பகுதியில் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் பஸ் சாரதியினை பொலிஸார் கைது செய்ததுள்ளதுடன் குறித்த ஆடைத் தொழிற்சாலைக்கு பலத்த பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

வீதியில் துவிச்சக்கர வண்டியில் பாடசாலை சென்றுகொண்டிருந்த சிறுமி தவறி வீதியில் விழுந்த போது குறித்த பஸ் சிறுமியை மோதிச் சென்றுள்ளது.

சிறுமி 3ஆம் வகுப்பில் கற்று வந்தமை குறிப்பிடத்தக்கது

# பஸ் கட்டணத்தில் அதிகரிப்பு இல்லையேல் பணிப் புறக்கணிப்பு



(கொழும்பு)

பஸ் கட்டணம் அதிகரிக்கவிடின் எதிர்வரும் 27ஆம திகதி முதல் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் என தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

மேலும், அடிப்படை பஸ் கட்டணம் இரண்டு ரூபாவினாலும் ஏனைய பஸ் கட்டணங்கள் 10 வீதம் அதிகரிக்கப்பட வேண்டும் என சங்கத்தினரால் வேண்டு கோள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், வேண்டுகோள் மறுக்கப்படின் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச பிரேரணையின்படி கடந்த இரண்டு வருடங்களாக எதுவித கட்டண அதிகரிப்பும் இன்றி தனியார் பஸ் உரிமையாளர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரச தரப்பினர் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## திருமதி குணரத்தினம் பவளம் (தேவி)



சாவகச்சேரி - சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், இல.126/41, பாண்டியந் தாழ்வு; கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் பவளம் (தேவி) 20.06.2011 நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் குணரத்தினத்தின் அன்பு மனைவியும், தர்மினி (அமரர்), குமுதினி, தர்சினி, மயூர்தி, குகானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா மகாலிங்கம், அன்னலட்சுமி செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபாவரனின் மாமியாரும் , ஒளியரசி, லக்ஷன், றஜீவன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி : இல.126/41,
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(124)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.